1045

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்



3 - DEC 1937

## ...திரமண்டலம்

(தொடர்ச்சி)

அணா 2

## நம் "மோகினி" பிரசுரங்களில் இரண்டு டாக்கி நாவல்கள்!

நீங்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்தது தான்

பணமா? குணமா?
அந்தஸ்தா? அன்பா?
தாயின் சேவையா?
தன் சுக வாசமா?
? ?
இது போன்ற பல
கேள்விகளுக்கு
பதில்

# * ராஜமோஹன் *

**மன்னிக்கவும்**

ராஜமோஹன் சென்ற ஆண்டு கடைசியில் வெளிவந்ததேனும், எல்லா பிரதிகளும் உடனே செலவாகி விட்டன. இரண்டாம் பதிப்பு சில மாறுதல்கள் செய்து வெளியிடப் படுவதால் தாமதத்திற்கு மன்னிக்கவும்.

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

மனத்தை யுருக்கிக்,
கண்ணீரைப் பெருக்கச்
செய்யும் பலவித
சம்பவங்களும்
நிறைந்த மிகவும்
மகத்தான கதை!

# * அனாதைப் பெண் *

**கவனியுங்கள்**

அனாதைப் பெண்ணின் முதற் பதிப்புப் பிரதிகள் வெகு விரைவாக செலவாகின்றன. சொற்ப பிரதிகளே கைவசமிருப்பதால், உங்கள் பிரதியை உடனே தருவியுங்கள். படித்து இன்புற்று, பிறகு படத்தைப் பார்த்துக் களியுங்கள்.

இதை நீங்கள் இன்னும் படித்திராவிட்டால்
இன்றே வாங்கிப் படியுங்கள்.

ந்திரகாந்தாவின் வெற்றிக்குப் பின்

எங்கள் அடுத்த மகத்தான தயாரிப்பு

"சுவாமிகாள்" உங்களுக்குத் தரிசனமளித்தார்.

"அனாதைப் பெண்" உங்கள் உள்ளத்தை உருக்குவாள்.

---

# அனாதைப் பெண்

தை: நம் நாட்டின் நாவலாசிரியை
ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாள்
சிறப்பாக எழுதியது.

னேரியோ & டைரேக்ஷன்:
Mr. R. பிரகாஷ்

சனங்கள்:
Mr. அய்யலு சோமயாஜுலு

பாடல்கள்:
Mr. பாபநாசம் சிவன்

க்ஷத்திர
படம்

தயாரிப்பவர்கள்:
ஜுபிடர் பிக்சர்ஸ்
லிமிடெட், திருப்பூர்

ஸ்டுடியோ:—மோஷன் பிக்சர்ஸ்
கம்பைன்ஸ், சென்னை

கதாநாயகன்:—உங்கள் அபிமானத்தைப்
பூரணமாகப் பெற்ற M. K. ராதா

அனாதைப்பெண் ? ? ? ?

இதர விவரங்களை எதிர்பாருங்கள்

3 - DEC
1830

---

விவரங்களுக்கு:

ஜுபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்., திருப்பூர்
(PRODUCTION DEPARTMENT)
திருமுஷி விலாஸ், 15, மாக்கிகால் ரோட்,
சேத்துப்பட்டு, சென்னை.

“சாரதா சட்டம்” அமுலுக்கு வந்தும்

வரதக்ஷிணைப் பிசாசின் ஆட்டம் அடங்க வில்லையா?

ஆஹா? அவளுடைய உண்மைக் காதல்—
உள்ளன்பு—பேரழகு — அருங் குணம்—
எல்லாம்.............. ...........................

**வரதக்ஷிணை பூதத்திற்கு**
**பலியாவதா?**



கணவனே கதியென நம்பி—தன்னை ஆனந்த சாகரத்தி லாழ்த்தி இன்புறச் செய் தாள் உண்மை அறியாத உத்தமி —பட்டு

இப்பேர்க்கொத்த அருமை மனைவியை மோசம் செய் வதா?

என்று எண்ணும்போது மனம் வெடித்து விடும் போலிருக்கிறது—கண்ணீர் ஆறய் பெருகுகிறது.

தான் இன்னொருத்தியை மணந்து கொண்டதை சொன்னால் அவள் உயிர்... என் செய்வான்?

—ராமரத்தினம்

உங்கள் மனோ வலிமையை
சோதிக்க வருகிறார்.

கொடுமை! கொடுமை!!

**விதியை வெல்ல முடியுமா?**

# மைனர் ராஜாமணி

## OLYMPIC PICTURES

No. 33, Jones Street,
Broadway, Madras.

ஸ்ரீ:

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.

| மலர் | ஈச்வரஸு புரட்டாசிமீ | இதழ் |
|---|---|---|
| 14 | October 1937 | 10 |

## திருமால் திருவந்தாதி

(முன் தொடர்ச்சி)

3. நகரினை யொழித்து நடுக்கடற் புதுந்தோர்
நகரியைத் தனக் குரித்தாகப்
பகர்வரி தாகும்படி சமைத்ததனுள்
பயின்றிடு பரமன்றன் றூய
புகலரு மறையும் புனிதரும் போற்றிப்
புகழ்ந்திடும் அடியிணை புகழின்
இகலறு பிறப்பும் இறப்பினே டேவையும்
இகந்திடும் நலமொருங் கடையும்

4. நலமொருங் கடைந்த நான்முகன் முன்னாள்
நாண்மிகுந் தருக்கினை யடைய
புலமிகுந் துடைய ரோமசன் றன்னால்
புரிசெருக் கொழித்தவற் கருளும்
வலமிகு மொளிசேர் ஆழியா னடிக்கள்
வணங்கு வையாயினன் மனமே!
நிலமுழு தாண்டு நெடுங்குடை நிழற்கீழ்
நீள்விசும் பாள்தவை நினைவாய்.

—திரு. ராகவாசாரியர்.

# குடி விலக்கு மசோதா

ஸ்ரீமான் M. C. ஸ்ரீநிவாசன், M. A., B. L.

உலகத்தில் பல விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் இருப்பது சகஜமே. ஒரு சிறு குடும்பத்திலேயே குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஏகோபித்த மனதுடன் காணப்படுவது சிரமமாக இருக்கிறது. ஆனால் சில விஷயங்களில் அம்மாதிரி அபிப்பிராய பேதம் இருப்பதால் எல்லா விஷயங்களிலும் சொல்லி விட முடியாது. குதர்க்க யுக்தியாகவும், எதிர்ப்புக்காக எதிர்ப்ப வர்களையும் விட்டுவிடுங்கள். நாம் பொதுவாக யோசனை செய்ய வேண்டும். பொது ஜனங்களின் நோக்கத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒருவன் செய்யும் காரியத்தி லிருந்து அபிப்பிரா யத்தை அறிந்துவிட முடியாது. அபிப்பிராயத்தி லிருந்து நமக்கு ஒரு எண்ணம் தோன்றலாம். அதற்கு மாறுபாடான எண்ணம் அவன் செயல்களிலிருந்து விளங்குவதாக யிருக்கும். நம்மனைவருக்கும் இந்தியா பூர்ண சுயேச்சையுடன் இருக்க வேணுமென்ற எண்ண மிருக்கிறது. ஆனால் தற்சமயம் நாம் அப்படி இல்லையே என்றதால் அவ்வெண்ணம் கிடையாதென்று எண்ணமுடியாது. தீமைகள் ஓங்கி உயர்ந்திருப்பது நன்மையை பரவவொட்டாமல் தடுப்பதாலேயே. இதில் அபிப்பிராய பேதம் ஏற்படுவதற்குக் காரணம் இல்லை. தீமையை அகற்ற முன் வருபவர்களை மெச்சாதவர்கள் சிலரே.

குடிப்பது நல்ல குணம் என்று எவரேனும் சொல்லுவார்க ளாகில் அதை யாவரும் ஆமோதிக்கப் போவதில்லை. "கொலை செய் வது நலம்; திருடுவது ச்ரேஷ்டம்; பொய் சொன்னால் தப்பில்லை; காமுகனாக இருப்பது தான் வாழ்க்கையின் நோக்கம்" என்று சொல்லுபவர்களிடம் நாம் வாதாட முடியாது. அரசாங்கம் நல்லதாக யிருந்தால் அம்மாதிரி தீய எண்ணங்களைப் பரவவொட் டாமல் தடுக்கும். அவ்வெண்ணங்களை செயல்களாக மாற்ற முற்பட்டால் சட்டங்கள்தான் அம் மனிதர்களைச் சீர் திருத்த வேணும்.

காங்கிரஸ் ஜனங்க ளிடையில் தீவிரமாக உழைக்க ஆரம் பித்த தினம் முதல் இக் குடியின் கேட்டை உரத்த குரலிலேயே எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது. 1921 சத்யாக்ரஹ இயக் கத்திலும், 1930-ல் நடந்த சட்ட மறுப்புப் போரிலும் கள்ளுக் கடை மறியலை ஒரு முக்கியமான ஆயுதமாக உபயோகித்தார்கள். காந்தி--இர்வின் ஒப்பந்தத்திலும் கள்ளுக் கடை மறியல் ஆமோ திக்கப்பட்டது. இவ்வருடம் காங்கிரஸ் செய்த தேர்தல் பிர சாரத்தில் குடியை ஒழிப்பது காங்கிரஸ் கொள்கையில் ஒன்று

என்று வாக்காளர்கள் அறிவார்கள். ஆகவே காங்கிரஸ் அரசாங்கத்தை நடத்த முன் வந்ததும் குடி ஒழிக்கும் மசோதா கொணர்ந்தது அதிசயமில்லை. சேலத்தில் ஆரம்பித்த சட்டம் கூடிய சீக்கிரத்தில் ராஜதானி முழுவதும் பரவும் என்று பொது ஜனங்கள் எதிர் பார்க்கிறார்கள்.

குடியால் விளையும் கேட்டை வர்ணிக்க வேண்டிய அவசியமில்லை. உடம்பு கெட்டுவிடுகிறது; ஐச்வர்யம் ஓடி விடுகிறது; கொலை களவு விருத்தியடைகிறது. நாம் மீளாக் குடியனின் பொருட்டு வருத்தப்படுவதில் பிரயோஜனமில்லை. குழந்தைகளையும், பெண்களையும் மீட்ட வேண்டுமென்ற எண்ணத்துடனேயே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்படும் பண நஷ்டத்தை நோக்கி வருந்துபவர்கள், ஏழைக் குடும்பங்கள் குடிப்பேயினால் வாட்டப்பட்டு வருந்துவதை நோக்க முடியவில்லையா ?

---

# பணத்திற்காக மதம் மாறுவதா ?

## ஹரிஜனில் காந்திஜி கட்டுரை

'நான்கு கேள்விகள்' என்ற தலைப்பின் கீழ் மகாத்மா இவ்வார ஹரிஜனில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஏதோ சில உலக சவுகர்யங்களுக்காக ஆசைப்பட்டு இஸ்லாத்தையோ, கிறிஸ்துவ மதத்தையோ தழுவிய சிலர் ஹிந்து மதத்திற்கு மீண்டும் திரும்ப விரும்புகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களில் லட்சக் கணக்கான பேர் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்ததுண்டு. திருவாங்கூரில் ஆலயப் பிரவேசப் பிரகடனம் வெளியான பின்பு, ஹரிஜன இயக்கத்தின் தீவிரத்தைக் கண்டு சிலர், மூதாதையர் மதத்துக்குத் திரும்ப நினைக்கின்றனர். பலாத்காரத்துக்கு அஞ்சியோ, பட்டினிக்குப் பயப்பட்டோ, உலக சுகங்கள் சில அடைய விரும்பியோ யாராவது வேறு மதத்தைத் தழுவினார்களானால் அது மதமாற்றமேயன்று. கூட்டம் கூட்டமாக மதம் மாற்றுவது செல்லாக் காசுக்குச் சமானமான காரியம். உண்மையான மதமாற்றம் ஹிருதயத்தினின்று ஏற்படுவதாகும். அது கடவுளின் தூண்டுதலாகும். மனிதனுடைய குரலுக்கும் ஆண்டவன் ஆக்ஞைக்கும் வித்யாசமில்லை.

"இம்மாதிரி சிலர் மீண்டும் ஹிந்து மதத்துக்கு வர விரும்பினால் தடபுடல்கள் ஏதுமின்றி சடங்குகளின்றி நான் சேர்த்துக்கொண்டு விடுவேன். உலகத்திலுள்ள எல்லாப் பெரிய மதங்களும் எனக்கு ஒரே விதமாய்த்தான் தோன்றுகின்றன."

# சர்க்கார் உத்யோகஸ்தர்கள் உடைகள்

சர்க்கார் உத்யோகஸ்தர்கள் உடைகளைப் பற்றியுள்ள தப்பு அபிப்பிராயத்தைப் போக்க சென்னை சர்க்கார் விட்டிருக்கும் ஓர் அறிக்கை :

போலீஸ் போன்ற நிரந்தர சர்விஸ் சம்பந்தப்பட்டவரையில், பொது ஜனங்களுக்கும் இந்த ஊழியர்களுக்கும் வித்யாசம் தெரிவதற்காக, சர்க்கார் குறிப்பாக ஒரு உடை ஏற்படுத்தியிருக்கின்றனர். மற்ற சர்க்கார் ஊழியர்களுக்கு உடைகள் சம்பந்தமாக எவ்விதமான தடையுமில்லை. பொதுவாக சமூகத்திற்கொத்த ஆபாசமற்ற எந்த உடையும் உடுத்தி வரலாம்.

## கதர் அரசியல் கட்சியின் குறியல்ல

'கிராமக் கைத்தொழிலுக்கு உபகாரம் செய்யும்படி நான் விடுத்திருக்கும் இவ்வேண்டுகோளில் ஒன்றைத் தெளிவாக்க வேண்டும். கதர் அணிந்ததால் அரசியல் கட்சியுடன் சம்பந்தப்பட்டதில்லை. விவசாயிகளுக்கு மற்றொரு வருமானத்திற்காகக் கதருக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்கப்படுகிறதை வேறு எந்த நோக்கத்துடனும் சொல்வதாக அர்த்தம் பண்ணக் கூடாது. சிலர் மிகவும் தப்பாக நினைப்பதுபோல், கதர் ஓர் அரசியல் கட்சியின் குறியல்ல. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, தேசிய பாஷைக்கு ஆதரவு இவையெல்லாம் எப்படி அரசியல் கட்சி விஷயங்கள் இல்லையோ அப்படியே கதரும் இல்லை. இவையெல்லாம் காங்கிரஸுடன் இணைக்கப்பட்டு, அதனால் மிகவும் ஆதரிக்கப்படுவதாயிருக்கின்றனவாகுனும், மற்றும் பல அறிஞர்களால் கட்சி பேதமின்றி ஒப்புக்கொள்ளப்பட்டவை. ஆபீஸர்களும், கீழ்தர உத்தியோகஸ்தர்களும் தாங்களே முன் வந்து இது விஷயத்தில் உதாரணம் காட்ட வேண்டுகிறேன்.''

—பிரதம மந்திரி

## காங்கிரஸ் ஆட்சி முறை

தவறான வழியிலிறங்குவோரை சிநேகபாவத்துடன் அணுகி அஹிம்ஸா முறையில் அடக்கப் போகிறது. எம்மாதிரியான பலாத்காரத்திற்கும் எதிராக பொது ஜன அபிப்பிராயத்தை உருப்படுத்தப் போகிறது. காங்கிரஸ் முறை தடை முறை, தண்டனை முறையல்ல. அதாவது காங்கிரஸ் போலீஸ் பலத்தாலும், ராணுவ பலத்தாலும் ஆளப் போவதில்லை. ஜனங்களுடைய நல்லபிப்பிராயத்தைக் கொண்டு தர்ம

நியாயத்தை ஸ்தாபித்து ஆளப் போகிறது............இப்பொழுதிருக்கும் ஆட்சி திட்டத்தை உடைப்பதற்கு மிகவும் நல்ல முறை, காங்கிரஸ் ராணுவமின்றி ஆட்சி பெறுவதே. போலீஸின் உதவி தேவையில்லை யென்று ஸ்பஷ்டமாகக் காட்டி விட்டால் போதும்.

மகாத்மா காந்தி (ஹரிஜன்)

# புத்தக விமர்சனம்

## ஸ்ரீ ஜவஹர்லால் நேரு சுயசரித்திரம்

[விலை ரூ 3. ஸ்ரீமான் சங்கு, கணேசன். சுதந்திரச்சங்கு காரியாலயம்; திருவல்லிக்கேணி.]

இந்த அரிய நூலை நமது பார்வைக்கு அனுப்பியதற்கு எமது மனமார்ந்த வந்தனம். தங்கம், வைரம் முதலியவைகளைச் சுலபமாக மதிப்பிடலாம். ஆனால் மகாத்மா காந்தி, ஸ்ரீ ஜவஹர் போன்ற தியாகிகளின் சுய சரிதைகளை மதிப்பிட யாராலும் இயலாது. அவர்களின் அரும்பொன் மொழிகளை ஒவ்வொருவரும் அறிந்து அவரவர்களது சக்திக்குத் தகுந்தவாறு அநுஷ்டிப்பதே அவர்களுக்கு உண்மையான மதிப்பைக் கொடுப்பதாகும். ஒருவரைப் போற்றுபவரைக் காட்டிலும் தூற்றுபவர்களிடமிருந்து வரும் மதிப்புரையிலிருந்தே அன்னவரின் உண்மையான மதிப்பை யறியலாம். ஸ்ரீ ஜவஹரின் பெயரைச்சொல்லும் போதே வெறுப்பும், திகிலும் கொள்ளும் ஆங்கிலேயர்களே அவரது சுய சரிதையைப் பற்றிப் பிரமாதமாகப் பூஷித்திருக்கையில் வேறு சொல்லவும் வேண்டுமோ? ஆங்கில பாஷா ஞானமில்லாததால் அவரே எழுதியதைப் படிக்கப் பாக்கியம் செய்யாத தமிழர்களுக்கு இப் புத்தகம் ஒரு அரிய பொக்கிஷமாகும். தேசாபிமானமில்லாது அடிமை வியாதியில் உழல்வோருக்கும் தேசபக்தியைப் புகட்டுவதோடு மற்றவர்களுக்கு ராஜீய, பொருளாதார வாழ்வில் ஈடுபட உணர்ச்சியைப் பெருக்கும் இத்தகைய "சுதந்திர சிந்தாமணி" ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்கவேண்டிய ஆபரணங்ளில் ஒன்றாகும்.

இந்தப் புத்தகம் வேண்டுவோர் தபால் செலவுள்பட ரூ. 3—12 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸிலும் கிடைக்கும்.

# பூர்ண மது விலக்கு

"பூர்ண மது விலக்கு அனுஷ்டானத்துக்கு வந்தாலன்றி நிர்மாண வேலைகளெல்லாம் நாசம் தான். கள் குடிப்பவனுக்கு கள் கிடைக்கு மாறு சர்க்காரே அநுமதி தந்து கொண்டிருந்தால் சீர்திருத்தக்காரனால் ஒரு சீர்திருத்தமும் பண்ண முடியவே முடியாது. தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் நான் கண்ட அநுபவங்களினின்றுதான் இத்தனையும் சொல்கிறேன்.

"கடவுள் புண்யத்தால் மது விலக்குத் திட்டம் வந்து விட்டது. இதர துறைகளில் காங்கிரஸ் ஏதாவது சாதிக்க முடிந்தாலும் சரி முடியா விட்டாலும் சரி, மது விலக்கு செய்வதாக காங்கிரஸ் 1920ல் பிரதிக்ஞை ஏற்று தனக்கு அதிகாரம் கிடைத்தவுடன் அதை அமுல் நடத்த ஆரம் பித்த விஷயம் மட்டும் நமது தேச சரித்திரத்தில் பொன்னெழுத்தால் தீட்ட வேண்டிய சம்பவமாகும்."

மகாத்மாவின் "ஹரிஜன்" கட்டுரை

# ஹிட்லர், முஸொலினியின் 4 கோரிக்கைகள்

வீனர் முஸோலினியின் அபிப்ராயங்களைத் தெரிவிக்கும் வீனர் காய்டா தம்முடைய பத்திரிகையில் முக்கியமான ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார்.

ஐரோப்பிய சமாதானத்துக்கு ஹிட்லரும் முஸோலினியும் தங்கள் ஐக்கியத்தை உபயோகிக்க வேண்டுமானால் கீழ்க் கண்டவை அங்கீகரிக்கப் படவேண்டியது அத்தியாவசியம் என்று அவர் கூறுகிறார்.

(1) பாஸிஸம், நாஜி தத்துவம் இரண்டும் சர்க்கார்களின் சித்தாந்தங்கள் என்று பரிபூர்ணமாய் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப் படவேண்டும்.

(2) வெளி நாடுகளில் பொறுப்புள்ள ராஜீய வாதிகள், ஜெர்மன் இத்தாலிய ஆக்ஷி முறைகளைப் பற்றி அவதூறாகப் பேசுவது நிற்கவேண்டும்.

(3) எல்லா சந்தர்ப்பங்களிலும் ராஜீய தொழில் முறை விவகாரங்களில் இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் சம உரிமை உண்டென்பதை அங்கீகரித்தாக வேண்டும். இந்த சம உரிமைக்கும், ஸர்வ தேச நீதிக்குமுள்ள சம்பந்தம், வார்த்தைகளைப் பற்றியதாயில்லாமல் சாத்திய சாதன உண்மைகளைப் பற்றியதாயிருக்கவேண்டும்.

(4) பொதுவுடைமையின் பேராபத்துகளை எல்லா தேசங்களும் அறிந்துணர்ந்து அதை எதிர்க்க பொதுப்படையான தற்காப்பு ஏற்பாடுகள் அவசியம் என்பதை அங்கீகரிக்க வேண்டும்.

## 5—வது அதிகாரம்

## கடவுளின் உதவியும், கடுமை மதியும்

ஓர் ஏழை எளிய மாணவன் ஓட்டமாக வந்து தன் சரீரத்திலுள்ள ரத்தத்தைக் கொடுத்ததானது மைனர் ஜமீந்தாரை ஒரு ஆட்டு ஆட்டியது. "ஒப்புக்குக் கூட, நாம் கொடுப்பதாகச் சொல்லாமலிருந்துவிட்டோமே! இதனல் நம்மிடம் மதிப்பு குறைந்துவிடுமோ?" என்ற எண்ணமும் உண்டாகியது. ஆனல் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அடக்கிக்கொண்டே உட்கார்ந்தார்.

ஏழை மாணவனை விரட்டியனுப்புவது சகஜமாகவிருந்தது. மைனர் ஜமீந்தாரை எவ்வாறு போகச் சொல்வது? அவ்விதம் செய்ய மனம்தான் வருமா! பணந்தான் இடங்கொடுக்குமா! சற்று நேரம் சென்று மைனர் விடை பெற்றுக்கொண்டு சென்றார். இப்போதும் அனுசூயா பிழைப்பாளா, மாட்டாளா வென்ற பெரிய கவலையாகவே அவள் பெற்றோருக்குத் தோன்றியது. நர்ஸை மட்டும் பக்கத்தில் வைத்துவிட்டு டாக்டரும் போய்விட்டார். அவ்வப்போது டெலிபோனில் சமாச்சாரத்தை விசாரித்துக்கொண்டிருந்தார்.

இரவு சுமார் ஒரு மணிக்குமேல் அனுசூயாவுக்கு மருந்துகள் வேலை செய்ய வாரம்பித்தன. நேரம் செல்லச் செல்ல சிறிது ப்ரக்ஞை உண்டாகியது எந்த உலகத்திலிருந்தோ பார்ப்பது போன்றும், பேசுவது போன்றும் தோன்றியது. "அம்மா!" என்று மட்டும் வாய் விட்டுக் கூப்பிட்டாள்.

அந்த ஒரு வாய் மொழிக்கே காத்துக்கொண்டிருந்த தாயும் தகப்பனும், நெடு நாட்கள் குழந்தைகள் இல்லாதிருந்த மலடிக்கு ஓர் ஆண் மகவு கிடைத்தது போன்றும், அஷ்ட தரித்திரனுக்குப் புதையல் கிடைத்ததுபோலும், பிறவிக்குருடனுக்கு புவி தோற்றங் காண ப்ரகாசமான பார்வை வரப் பெற்றதுபோலுமான மட்டற்ற மகிழ்ச்சியை யடைந்து, பக்கத்தில் வந்து கண்ணீர் பெருகியவாறு மகளை யணைத்துக்கொண்டு "அம்மா! அனுசூயா! என்னம்மா! என்ன வேண்டும்?" என்றார்கள்.

அனுசூயா வாய் திறந்து பேசமாட்டாமல் கை சமிக்ஞையால் "உடம்பெல்லாம் வலிக்கிறது. தலைவலி தாங்க முடியவில்லை" என்றாள். உடனே மிஸஸ் ராமலிங்கம் டாக்டரை வரும்படிக்கு டெலிபோனில் சொன்னாள். அனுசூயா "ஊம்! ஊம்"....என்று முனக வாம்ரபித்தாள்.

அச் சமயம்தான் நாம் முன்னதிகாரத்தில் கூறியதுபோல் மகாதேவன் வீதி கேட்டின்மீது ஏறி குதிக்க எண்ணியதும் உடனே ரோந்துக்காரர்கள் பிடித்துக்கொண்டதுமான விபத்து ஏற்பட்டது. சேவகர்கள் பிடித்துக்கொண்ட உடனே மகாதேவனுக்கு ஏற்பட்ட துக்கம், வெட்கம் இரண்டும் தாங்க முடியவில்லை ப்ராணனே போவது போன்ற வேதனையுண்டாகிவிட்டது.

அந்த சேவகர்களின் பார்வையும், பேச்சும் முரட்டுத் தனத்தைக் காட்டுகிறதேயன்றி கொஞ்சமாவது தயை, தாக்ஷிண்யம் ஈவு, இரக்கம் இருப்பதாகத் தெரியவில்லை மகாதேவன் மெல்லிய குரலில் "ஐயா! நான் நீங்கள் நினைக்கிறபடி திருடனில்லை. களவாட வந்தவனல்ல. ஓர் பி. ஏ. வகுப்பு மாணவன். என் மனோ வேகத்தை பகவான்தான் அறிவார். நீங்களறியமாட்டீர்கள். நான் செய்த இக் காரியம் கடவுளறியக் குற்றமில்லை. என்...

என்று மேலே சொல்வதற்குள் அவர்கள் இடை மறுத்து "டேய்! போதும் உன் கட்டுக்கதை. B A. வகுப்பு மாணவன் என்று பொய் கூறிவிட்டால் விட்டுவிடுவார்கள் என்று பார்த்தாயா!

வாடா ஸ்டேஷனுக்கு. உன் சப்பக்கட்டுகளெல்லாம் எங்களிடம் சாயாது'' என்று முரட்டுத்தனமாக இறைந்து பேசுவதைப் பார்த்ததும் மகாதேவனுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. இந்த விவாதக் குரல் கேட்டு உள்ளே இருக்கும் தன் மாமன் முதலியோருக்கு இது தெரிந்துவிடப்போகிறதே என்ற பயமும் திகிலும் பிடித்துக்கொண்டன.

“இவர்களுடன் இங்கு பேச்சுக் கொடுக்காமல் இதை விட்டுத் தாண்டிய பிறகுதான் பேசவேண்டும்'' என்று எண்ணி மவுனமாக அவர்கள் இழுத்தபடியே தலைவிதியை எண்ணி நடக்க வாரம்பித்தான். தான் திமிரிக்கொண்டு குதித்து ஓடிவிடலாமா என்றும் தோன்றுகிறது. அம்மாதிரி செய்தால் தன்மீது போலீஸாருக்கு பின்னும் ஆத்திரம் அதிகமாகும்; ஆகையினால் பின்னும் சண்டையும் பூசலுமே யொழிய வேறில்லை என்று தோன்றியதால் சற்று அடக்கிக்கொண்டான்.

அந்த தெருவைக் கடந்து வேறு தெருவில் போகையில் எதிரே ஒரு மோட்டார் கார் வந்தது. அதில் வந்த ஒரு பெரிய டாக்டர் வண்டியிலிருந்தபடியே இச் சேவகர்கள் மகாதேவனை இழுத்துச்செல்வதைப் பார்த்ததும், சற்று யோசனை செய்தவாறு காரை மெல்ல நிறுத்தினர்.

183011

அதே சமயம் மகாதேவன் “ஐயா! உங்களுக்கு இரக்கமில்லையா? இம்மாதிரி நிரபராதியை இழுத்துச்செல்வதுதானா உங்கள் வீரம்! இதுதானா உங்கள் சாமர்த்தியம்!'' என்று கெஞ்சுங் குரல் டாக்டருக்குக் கேட்டது. உடனே அவர் வண்டியிலிருந்தபடியே ‘மகாதேவா!'' என்று அழைத்ததும், சேவகர்கள் மகாதேவன் மூவரும் அசந்துவிட்டார்கள்.

மகாதேவனும் பெரிய டாக்டரைப் பார்த்தவுடன் புதையல் ‘அகப்பட்டதுபோன்ற பெரும் சந்தோஷத்தை யடைந்து “ஹா! டாக்டர்! டாக்டர்!'' என்று துள்ளிக் குதித்தான்.

டாக்டர்:—மிஸ்டர் மகாதேவன்! இதென்ன கூத்து! ஏன் இவர்கள் உன்னைப் பிடித்துக்கொண்டார்கள்?

மகாதே:—டாக்டர்! என்னைத் திருடன் என்று பிடித்துக் கொண்டார்கள். தாங்களிருக்கும்போதே நான் சென்றுவிட்டபிறகு என்னுடைய மனம் கட்டு மீறிப் பதைத்தது. ஆனவரையில் வேலைக் காரனை கெஞ்சியும் கேட்டுக்குள் விட மறுத்துவிட்டான். அனு சூயாவின் உடம்பு எப்படி இருக்கிறதோ என்ற ஓர் மனோ வேகத்தி னால், பூட்டப்பட்டிருந்த அவர்களது கேட்டின்மேல் ஏறிப் பார்க்கத் துணிந்து ஏறினேன். அப்போதே இவர்கள் பிடித்துக்கொண் டார்கள். நான் எத்தனை சொல்லியும் கேட்கவில்லை விதியே என்று செல்கிறேன் ... டாக்டர்! ... அனுசூயா பிழைத்துக்கொள்வாளா? அவளுக்கு எப்படி இருக்கிறது?'' என்று மனத்திலுள்ள வேகம் முற்றும் தொனியால் வெளிப்படுத்திக் கேட்டான்.

போலீஸ்காரர்களுக்கு தாம் தோல்வியுற்ற விசனமும், ஏமாற்றமும் பாதிக்கின்றன. "பெரிய டாக்டர் என்ன நினைப் பாரோ! என்ன சொல்வாரோ!'' என்ற பயமும் கூடவே வேலை செய்வதால் அவர்களாகவே முந்திக்கொண்டு "ஸார்! இந்த நடுநிசியில் ஒரு மனிதன் கேட்டின்மீது ஏறினால் நாங்கள் என்ன நினைப்பது? எங்கள் கடமை பிடிக்கவேண்டியதுதானே. மேலும் இவர் எங்க ளுக்குத் தெரியாது. நாங்கள் என்ன செய்வது சொல்லுங்கள் மன்னிக்கவேண்டும்; நாங்கள் சென்று வருகிறோம்' என்று கூறிக் கொண்டே பதிலுக்கும் எதிர் பார்க்காமல் வேகமாக நடந்து காட்டி விட்டார்கள்.

டாக்டர்:—உன் மனோவேகத்தை அவர்களறிவார்களா? அதனால் நீ செய்ததென்னவோ குற்றந்தான். ஏதோ நல்ல காலத்திற்கு இம் மட்டுடன் நின்றதே அதுவும் அதிர்ஷ்டந்தான். அனுசூயாவுக்கு இனி உயிருக்குப் பயமில்லை என்று தோன்றுகிறது...நான் உன்னைப் பற்றியே வியந்துகொண்டிருந்தேன். நீ சமயத்திற்கு உன் ரத்தத்தை சற்றும் தியங்காமல் கொடுத்ததானது மிகவும் போற்றக்கூடிய தாகும். அனுசூயாவை மணக்கப்போகும் மைனர் ஜமீந்தார் வாயையே திறக்காமல் மவுனம் சாதித்தது எனக்கு மிக மிக வியப்

பாகத் தோன்றியது. சரி, நான் இப்போது அங்குதான் போகிறேன்; நீ என்னுடன் கூடவே வா; அழைத்துச் செல்கிறேன்'' என்றார்.

இவ்வார்த்தையை விட வேறு எந்த நிதியும் அச்சமயம் மகாதேவனை மகிழ்வித்திருக்க முடியாதல்லவா? உடனே வண்டியில் அமர்ந்தான். காரும் வேகமாகப் பறந்து பங்களாவின் உள்ளே சென்றதும் டாக்டருடன் மகாதேவனும் வருவதைக் கண்ட ராமலிங்கத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. எனினும் அதைக் காட்டிக்கொள்ளாமல் டாக்டரை உபசரித்து அழைத்துச் சென்றார்.

அப்போதுதான் அனுசூயாவுக்கு நர்ஸ் ஒத்தடம் போட்டுக் கொண்டிருந்தாள். அனுசூயா மெல்லிய குரலில் "ஹா.... அம்மா! அம்மா!'' வென்று முனகிக்கொண்டிருந்தாள். டாக்டர் அவளை நன்றாக கவனித்துப் பின் "அம்மா! உடம்பு முற்றிலும் வலியா! தலை மட்டும் வலியா?' என்று கேட்டார். பேசமாட்டாது ஹீன ஸ்வரத்தில் "தேகம் பூராவும் வலிக்கிறது. தலையில் அதிகமாக வலிக்கிறது'' என்று டாக்டரைப் பார்த்துச் சொல்லும்போது அங்கு மகாதேவன் வாடி வதங்கிய முகத்துடன், கண்ணில் நீர் முட்டிய வாறு நிற்பதைக் கண்டதும், அத்தனை உடம்பிலும் அவளை ஒரு குலுக்கு குலுக்கியது. அவளால் நம்பவே முடியவில்லை. "இது உண்மைத் தோற்றமா! அன்றி சொப்பன உலகமா?'' என்ற குழப்பம் உண்டாகியதால் அவளுடைய மிகவும் கேவலமான நிலைமையில் இந்த அதிர்ச்சியும் குழப்பமும் தாங்காமல் மீண்டும் சோர்ந்துவிட்டாள்.

டாக்டர் இவளுக்கு நோய் தெரியாதிருக்கும் பொருட்டும் தூக்கம் வருவதற்கும் ஒரு மருந்தை ஊசியால் ஏற்றிவிட்டு "இனி மேல் அத்தனை வலி தெரியாது. நன்றாகத் தூக்கமும் வரும். அம்மா! இனி கவலை வேண்டாம்; நாளைக்கு இன்னும் சரியாகி விடும்.'' என்றார்.

ராமலிங்கம் :—"ஏது? இந்த நடுநிசியில் நீ எப்படி வந்தாய்?'' என்று மகாதேவனைக் கேட்டார். மகாதேவன் மெல்லவும் மாட்

டாது, விழுங்கவும் மாட்டாது தவித்தபடியே தலையைக் குனிந்துவிட்டான். தொனி எழும்பவில்லை. "அனுசூயாவுக்கு எப்படி இருக்கிறதென்று விசாரிக்கத்தான் வந்தேன் மாமா!" என்று இழுத்தாற்போல் கூறினன்.

இவன் பயந்துத் தியங்குவதை யறிந்த டாக்டர் சமய சஞ்சீவி போல் பேசத்தொடங்கி "இப்போதுதான் இவரும் எனக்கு டெலிபோன் செய்து விசாரித்தார். நான் வரும்போது இவர் வீதியில் நின்றிருந்தார். கூடவே அழைத்து வந்தேன். இவர் வெகு நல்ல மனிதர். தன் சரீரத்திலிருந்து ரத்தத்தைக் கொடுக்க முன்னே வந்ததானது எனக்குப் பெரும் வியப்பாயும், அதிசயமாயும் இருக்கிறது.

நேற்று இங்கு உட்கார்ந்திருந்த ஜமீன்தாரின் சகோதரிக்கு ஒரு சமயம் இத்தகைய பேராபத்து நேர்ந்து விட்ட காலத்தில் அப்பெண்ணின் புருஷனும், இதே ஜமீந்தாரும் ஒரு உயிரைக் காக்க சொட்டு ரத்தங் கொடுத்து உதவி செய்ய மறுத்துவிட்டார்கள். எனக்கு அது வெகு விசித்திரமாகவிருந்தது, கூலி வேலை செய்யும் ஒரு பெண்ணுக்கு பணத்தைக் கொடுத்து ரத்தத்தை வாங்கி நோயாளிக்கு ஏற்றினேன். அந்த கேஸ் முற்றும் எனக்கு நினைவுக்கு வந்துவிட்டது, இவர் உங்கள் பந்துவாக இருந்தாலும் இம்மாதிரி ஆபத்திற்கு உதவ வந்ததானது போற்றக்கூடியதே யாகும்" என்று மகாதேவனைப்பற்றிப் புகழ்ந்து பேசினர்.

தன் மகளுக்கு உயிரைக் கொடுத்த பெரும் சந்தோஷம் மனத்தில் பொங்குவதால் ராமலிங்கமும் சேர்ந்துகொண்டே மகாதேவனைக் கொண்டாடியதோடு அவன் பெற்றோர்களையும் வெகு வாய்ப் புகழ்ந்து பேசினர். அப்போதும் அனுசூயாவுக்குச் சரியானபடி பேசவோ, கேட்கவோ முடியவில்லை குழப்பமும் தடுமாற்றமும் வலியின் தொந்தரவும் பாதித்ததால் அசைவற்றுக் கிடந்தாள்; எனினும் மகாதேவனின் உருவத்தைத் தான் பார்த்தது உண்மையா! என்ற பெருங் கலவரம் மட்டும் அவள் இதயத்தில் வேலை செய்துகொண்டே இருந்தது. ஆனல் கண்ணைத் திறந்து பார்க்கவோ, விசாரிக்கவோ முடியவில்லை.

டாக்டர் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கிளம்பினர். மகாதேவனுக்கும் அது வரையில்தானே நிற்க அதிகாரம். முகத்தில் அசடு தட்டுகிறது; மனமோ இதை விட்டுப்போக விரும்பவில்லை. அப்போதே தன்னைப் போகச் சொல்லிய மாமனும், மாமியும் இப்போது அந்த விதிக்கு விலக்காக நடப்பார்களா என்ன? அனுசூயாவைப் பார்க்கிறன். பூமியைப் பார்க்கிறன். ஒருவருடனும் பேசுவதற்கு ப்ரியப்படவில்லை; வைத்தியர் கிளம்புகையில் தானும் மரியாதையாகப் பின்னலேயே புறப்பட்டுவிட்டான்.

ஒருவரும் கனவில்கூட நினையாதபடி மிஸஸ் ராமலிங்கம் "மகாதேவா! இந்த ராத்திரியில் போய் கதவை இடிப்பானேன். இங்குதான் இரேன். அந்த ஹாலில் விசுப்பலகையில் படுத்துக் கொள்ளு. காலையில் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்ருள். இந்த வார்த்தை மகாதேவனுக்கு பத்து யானையின் பலத்தையும், புதையல் கிடைத்ததுபோன்ற சந்தோஷத்தையும் கொடுத்தது. 'சரி' என்று கூறி நின்றுவிட்டான். டாக்டரும் போய் விட்டார்.

மகாதேவன் சில விநாடிகள் தியங்கியபடி அந்த அறையிலேயே நின்ருன். பிறகு குப்பம்மாள் விசுப்பலகையில் படுக்கும்படிக்கு ஆக்ஞாபித்தாள். மறு பேச்சின்றி போய்விட்டான். குப்பம்மாளும் அங்கு வந்து உட்கார்ந்தாள்...

குப்ப:—ஏது நீ இப்போது இந்த ஊருக்கு வந்தது? லீவு இப்போது கிடையாதே....

மகா:—லீவு கிடையாது. வாங்கிக்கொண்டு ஒரு முக்கிய காரியமாக மாமாவையும் உங்களையும் பார்த்துவிட்டுப் போகவே வந்தேன். அதாவது: எனக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவந்த பெரியார் திடீரென்று இறந்துவிட்டாராம். இம்மாதத்துடன் அவர் தர்மமும் முடிந்துவிட்டது. மதுரைக்குச் சென்று நேரில் அவர் பிள்ளைகளை உதவி கேட்டும் பலனில்லாது போய்விட்டது. அடுத்த மாதம் சம்பளத்திற்கே வழி இல்லாமையினல் என்ன

செய்வதென்று தவிக்கிறேன். படிப்பை விடவும் மனமில்லை. மாமா ஏதாவது உபகாரம் செய்ய முடியுமா அல்லது யாரையாவது சிபார்சு செய்ய முடியுமாவென்று கேட்பதற்கே இங்கே வந்தேன். வந்தவிடத்தில் இத்தனை தடபுடலாகிவிட்டதால் மனம் உடைந்து போய்விட்டது. எப்படி மாமாவிடம் தெரிவிப்பதென்று அஞ்சினேன். நீங்களே கேட்டதால் சொல்லிவிட்டேன். இந்த சமயம் ஏதாவது உதவி செய்தால் அதை எப்படியும் நான் பிற்காலத்தில் திருப்பிக் கொடுத்து விடுவேன்.

சுப்ப:—அடாடா! ஏ தோ ஏழைப்பையனுகவிருந்தாலும் கடவுள் கிருபையால் வித்யாதானத்தை ஏற்றுக்கொண்டு உன்னை முன்னுக்கு கொண்டுவருவதற்கு ஒருவர் கிடைத்தார் என்று சந்தோஷப்பட்டோமே. இப்படியா ஆய்விட்டது! நல்ல வேளையாக இதை மாமாவிடம் தெரிவிக்காமல் என்னிடம் தெரிவித்தாயே. அவருக்கு இம்மாதிரி செய்வதெல்லாம் சற்றும் பிடிக்காது. அதோடு அருணாசலத்திற்குப் பணத்தை செலவிட்டுப் படிக்கவைத்து பல தரம் படிப்பில் தோல்வி ஏற்பட்டுவிட்டதால் வெறுப்பு அதிகமாகி விட்டது. அதோடு இக் காலத்தில் ஒரு காசு கிடைப்பது குதிரைக் கொம்பாகவிருக்கிறது. தங்கள் குடும்பத்திற்கே போதாது திண்டாடுகிறார்கள். படித்தும் வேலையில்லாத் திண்டாட்டமோ கூறத் திறமில்லை. இன்னிலைமையில் பிறருக்கு உதவி செய்துவிட்டால் இவர்களுக்கு எப்படி கட்டுப்படியாகும்?

மகாதேவா! நான் சொல்கிறேன் கேள். இதுவரையில்தான் உனக்கு ப்ராப்தம் என்று எண்ணிக்கொண்டு படிப்பை நிறுத்தி விட்டு எங்காவது வேலைக்குத் திரிந்து அலைந்து பாடுபடு. ஏதாவது ஒரு கணக்கு எழுதும் வேலை கிடைத்தாலும் போதும். தாயும் நீயும் சுகமாக ஜீவிக்கலாம். கஷ்டப்படுகிறவர்கள் கல்யாண ஆசையை ஒழித்துவிடவேண்டும். நீ நன்றாக சம்பாதிக்க முற்பட்டால் அப்போது வேண்டுமானல் யாரையாவது மணந்துகொள்ளலாம். எத்தனை குடும்பங்களில் பாழும் கல்யாணப் பித்து பிடித்து தரித்திரங்கள் எல்லாம் கல்யாணத்தைச் செய்துகொண்டு பன்றியைப்

போல் பத்து குட்டிகளையும் போட்டுவிட்டு பிண்டத்திற்கு லாட்டரி யடிக்கிறார்கள் தெரியுமா!

கணக்கெடுத்தால் அந்த தரித்திரர்களின் தொகைதான் அதிகமாக விருக்கும். ஏதோ நல்ல வேளை உன் தாயார் அதிர்ஷ்டசாலியாய் உன்னோடு நின்றுவிட்டாள். படித்தவர்கள் எல்லாம் புரட்டிவிட்டார்கள். அந்த ஆசையை விட்டு விடு. மாமாவிடம் கேட்காதே; மரியாதையாகப் போய்விடு. அவர் கண்டபடி திட்டிவிடுவார். பெரிய வகுப்பாகிய B.A. படிப்பு என்றால் சாமானிய செலவாகுமா! அதெல்லாம் நடக்காத காரியம். நீ செய்த பேருதவிக்கு நாங்கள் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்; ஆயினும், நடவாத ஆசையை விட்டு விடு.'' என்று பெரியதோர் ப்ரஸங்கம் போல் மூச்சைப் பிடித்துக்கொண்டு கூறினாள்.

இந்தம்மாள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் தேவன் மனத்தில் அம்பு பாய்வதுபோல் பாய்கிறது. ஏழைகளைப்பற்றி இந்தம்மாள் எவ்வளவு கேவலமாக எண்ணியிருக்கிறாள் என்பது உள்ளங் கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிட்டது. இன்னும் அதிகமாகப் பேசினால் ஏழை என்ற வெறுப்பால் இன்னும் என்னென்ன வார்த்தைகள் வருமோ என்று பயமும் உண்டாகிவிட்டது. அவர்களுடைய அபிப்ராயம் என்னவோ நன்றாகத் தெரிந்துவிட்டது. இனிமேல் தான் வந்த காரியத்தை நினைப்பதற்குக்கூட யோக்யதை இல்லை. ஆகையால் மவுனமாக எழுந்து போய்விடுவதே உசிதம் என்றும் தோன்றிவிட்டது.

அதற்குமேல் பேசவும் நா எழவில்லை. அந்தம்மாள் சொல்லியதற்கெல்லாம் தலையை ஆட்டிக்கொண்டே உட்கார்ந்திருந்தான். தான் பரம ஏழை, தரித்திரன் என்ற உணர்ச்சியால் தன்னை அவர்கள் ஓர் கேவலமான வ்யாதியைப்போல் வெறுப்பதாகத் தோன்றிய உடனே அவன் மனம் சுழல் காற்றுப் பஞ்சுபோல் அல்லல்பட வாரம்பித்தது. மெல்ல சமாளித்துக்கொண்டு ''மாமி! உங்கள் புத்திமதியால் நான் சிருதார்த்தனானேன். மாமாவிடம் நான் தெரிவிக்கவில்லை. நான் இப்போதே போகிறேன். விடியற்காலை

வண்டிக்கே ஊருக்குப் போய்விடுவேன். கடவுள் கருணையால் உங்கள் வயிறு குளிர்ந்தால் போதும். நான் உத்திரவு வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறும்போது அவனையறியாது கண்ணீர் முட்டிவிட்டது.

அதே சமயம் "அம்மா!'' வென்று அனுசூயா கூப்பிடுங் குரல் கேட்டு குப்பம்மாள் எழுந்து ஓடினாள். மகாதேவனும் பின்னோடு தைரியமாகச் சென்றான். குப்பம்மாள் அனுசூயாவின் பக்கத்தில் நின்று "என்னம்மா!'' என்று வாஞ்சையோடு கேட்டாள். மகாதேவனும் 'இச்சமயம் விட்டால் இனி எப்போதுதான் அனுசூயாவைப் பார்க்க நேருமோ!' என்ற ஏக்கத்தினாலும், அன்பினாலும் திடீரென்று உதிக்கப்பட்ட தைரியத்துடன் "அனுசூயா!.... நான் தெரிகிறதா?'' என்று கேட்டான்.

ஆச்சரியத்தினால் அலறியவாறு "ஹ!...தேவா!....தேவனா... எப்போது வந்தாய்?'' என்று அளப்பரிய ஆநந்தத்துடன் கேட்டவாறு மகாதேவனையே உற்று நோக்கினாள். அவன் கையில் கட்டு கட்டி இருப்பதை நோக்கி, "கையிலென்ன கட்டு? எங்கே அடி பட்டது.?'' என்று வியப்பாகக் கேட்டாள்.

குப்பு:—கடவுள்தான் இவனை சரியான சமயத்திற்கு இங்கு கொண்டுவந்துவிட்டார். உன்னை இழந்துவிட்டதாகவே தீர்மானம் செய்துவிட்ட தருணம் இவன் கையிலிருந்து ரத்தத்தை உன் உடம்பில் ஏற்றியபிறகுதான் நீ பிழைத்தாய். ரத்தம் எடுத்த இடத்தில் டாக்டர் மருந்து போட்டுக் கட்டி இருக்கிறார்—

என்று கூறியதைக் கேட்டபிறகுதான் அனுசூயாவுக்கு இந்த விஷயம் தெரியுமாதலால், முன்னினும் பன்மடங்கு அதிகரித்த வியப்பும், ஆநந்தமும் குபீரென்று இதயத்தில் பொங்கி எழுந்தது. "அம்மா! அந்த சிறு வாழைப்பழத் தோலினாலா இத்தனை விபத்து நேர்ந்துவிட்டது! தேவனா ரத்தத்தைக் கொடுத்தான்! என்ன ஆச்சரியம்! தேவா!''....அதற்குமேல் ஆயாசமும், அதிர்ச்சியும் ஒன்றுகூடிவிட்டதால் பேச முடியாது கண்ணில் நீர் பெருக மவுனமாகிவிட்டாள்.

பிறகு அவள் கண் திறந்து பார்க்கும்போது நன்ருக வெளிச்சமாகி இருந்தது. தன்னருகில் தாதி ஐஸ் வைத்தபடியே இருப்பதையும், மைனர் ஜமீந்தாரும் தகப்பனரும் கட்டிலின் வெகு சமீபத்தில் உட்கார்ந்திருப்பதையும் கண்டாள். தேவன் அங்கில்லாததையும் உணர்ந்தாள். அந்த ஜமீந்தாரின் முகத்தைப் பார்ப்பதற்கே பிடிக்காமல் அபாரமான வெறுப்பும் அசங்கியமும் தோன்றியது. அதே சமயம் ராமலிங்கம் "அம்மணீ! இதோ பார். உன்னைப் பார்க்க மைனர் ஜமீந்தார் வந்திருக்கிருர்; பாரு". என்று வெகு உருக்கமாகக் கூறினர்.

அனுசூயாவுக்கு இவ்வார்த்தை நாராசம்போல் தோன்றியது. உடனே வெகு அலக்ஷியமாக அந்த பக்கம் திரும்பிக்கொண்டு போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்துவிட்டாள். இந்த செய்கை ஜமீந்தாரின் மனத்தில் சுருக்கென்று தைத்தது. ராமலிங்கத்திற்கும் சிறிது கோபம் வந்துவிட்டது. திருடனுக்குத் தேள் கொட்டினுல் வாயைத் திறப்பானு? அதுபோல் மூவர் மனே நிலைமையும் ஆயிற்று. ஜெமீந்தார் ஓர் பெருமூச்சு விட்டு முறுக்காயும் விரைப்பாயும் பார்த்தபடியே அனுசூயா திரும்பியுள்ள பக்கமாய் கட்டிலின் அருகில் சென்ருர்.

---

## 6—வது அதிகாரம்

## முடிந்த கல்வியும் இடிந்த மனமும்

பழய ஹாஸ்டல், பழய தன் விடுதி, பழய மாணவர்கள், பழய புஸ்தகங்கள் முதலிய யாவும் முற்றிலும் புதியதாயும், சகிக்க முடியாத ஒருவிதமான உணர்ச்சியுடனும் மகாதேவனுக்குத் தோன்றின. ஏழைகளைப்பற்றித் தன் மாமி தெரிவித்த சுடுச்சொற்கள் அவன் மனத்தில் ஆணி

அறைவதுபோல் பதிந்து வேலை செய்கின்றன. அனுசூயாவின் தேக நிலை ஒருபுறம் வதைக்கிறது. தன் மாணவ வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுப் போகவேண்டுமே என்ற துக்கம் ஒரு புறம் பொங்கி வருகிறது.

இத்தனை வேதனைகளுடன் உட்கார்ந்திருந்த தேவனைப் பார்த்ததும் லோகநாதனுக்கு வியப்பாகிவிட்டது. "என்ன தேவா! சென்ற காரியத்தில்"...என்று அவன் முடிப்பதற்குள் தேவன் "என்னைப் பார்த்தாலே போதுமே. கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமா? எல்லாம் பூஜ்யம்; எல்லாம் உடைந்துவிட்டது. இனிமேல் மூட்டையைக் கட்டவேண்டியதுதான்." என்று கூறும் போது கண்ணீர்த் துளிகள் வெளிக்கிளம்பிவிட்டன.

கல்வியிலும், பட்டங்கள் வாங்குவதிலும் அவன் வைத்திருந்த பெரும் ஆவலும், எதிர் பார்ப்பும் திடீரென்று உடைந்துவிட்டதால் உலகமே இருண்டுவிட்டதுபோலாகிவிட்டது. "வேறு எங்காவது சென்று உதவி கோரினையா?" என்று லோகு கேட்டான்.

எல்லாவித முயற்சியும் செய்து முடித்துக்கொண்டுதான் மூட்டை கட்ட வந்து சேர்ந்தேன். இன்னும் ஒரு வாரம் பள்ளிக் கூடம் போகலாம். அதில் என்ன லாபம்? இப்போதே ஊருக்குப் போய்விடுகிறேன்." என்றான்.

லோகு :—இதற்குள் இப்படி அவசரப்படாதே. இன்னும் ஒரு வாரத்திற்கு ஹாஸ்டல் சாப்பாடு இருக்கிறது. இங்கிருந்தபடியே இன்னும் சிலரைப் போய் பார்; அல்லது வேலைக்காவது முயற்சி செய்து பாரேன். ஒன்றுமில்லையெனில் உன் தீர்மானத்தை நிறைவேற்றி விடு.

மகா :—இதென்ன பைத்தியக்காரத்தனம்! இந்த ஒரு வாரம் அலைந்தால் அதனால் என்ன கிடைத்துவிடும் என்று நினைக்கிறாய்? "வேலை இல்லை; வெளியே போ" என்கிற பெரும் இரைச்சல்தான் மேல் உலகத்தையும் தாக்குகிறதே! ஒவ்வொரு கட்டிடமும் பாக்கி இல்லாமல் ஏறி இறங்கி வேண்டுமானால் பார்த்துவிடுகிறேன்." என்று சலிப்பாகக் கூறினான்.

அன்று முதல் எத்தனை ஷாப்புக்கள், எத்தனை ஓட்டல்கள், ஜவுளிக்கடைகள், மளிகைக் கடைகள், முதலிய பல விடங்களுக்கு உடம்பை வளைத்தும், பல்லைக் காட்டியும் கூசிக் கூசி மனந்தவித்த படியே ஏறி இறங்கினன். "வேலை இல்லை" என்ற எதிரொலி அண்டத்தை யளாவியது. இவனுக்கிருந்த 7 நாட்களில் 6 நாட்களும் முடிந்துவிட்டன. கால்களும் சலித்துப்போய் ஓய்ந்துவிட்டன.

பித்தன்போல் தள்ளாடித் தடுமாடி நடந்து வருகையில் ஓர் பெரிய துணி மில் கட்டிடம் கண்ணுக்குப் பட்டது. "இதைத்தான் ஏன் பாக்கியில் வைக்கவேண்டும்? இதில் நுழைந்து புறப்பட்டுவிடுவோம்" என்ற சலிப்புடன் அதில் ஏறினன். அந்த மில்லின் மானேஜர் ரூமில் சென்று தன் பல்லிளித்த ராகத்தின் பல்லவியைப் பாடினன்.

மானேஜர் :—உனக்கு மில்லில் செய்யக்கூடிய வேலைகள் என்ன தெரியும்? B. A. படித்ததாகவன்றோ சொல்லுகிறாய்?

தேவன் :—எது படித்தால் என்ன! எந்த வேலையைச் செய்யச் சொன்னலும் செய்யத் தயாராக இருக்கிறேன். தெரியாத வேலைகளை இரண்டு நாள் கற்றுக்கொண்டால் சரியாய்விடுகிறது.

மானே :—மெகானிஸம், டைப்ரைடிங்கு, ஷார்ட்டு ஹாண்டு முதலியன வருமா?

தேவ :—டைப்ரைடிங்கு வரும்; ஷார்ட்டாண்டும் வரும். மெகானிஸம் வெகு விரைவில் கற்றுக்கொள்கிறேன்.

மானே :—உனக்கு வேலை கொடுக்கலாமென்றுதான் தோன்றுகிறது. (இந்த வார்த்தை தேவன் காதில் பட்ட உடனே அவன் முகமும், இதயமும் சூரியனைக் கண்ட தாமரையைப்போல் மலர்ந்து சந்தோஷ நகைப்பு வருகிறது). ஆனல் ஒரு டைபிஸ்டு வேலை மட்டுந்தான் செய்யவேண்டும் என்று இருக்கக்கூடாது. எந்தெந்த சமயத்தில் எதெது செய்யவேண்டுமோ அத்தனையையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். சில சமயம் சில முக்யமான இடங்

களுக்கு மூட்டையும் தூக்கிக்கொண்டு போகவேண்டும். என்ன சொல்கிறாய்?

தேவ :—எந்த வேலை செய்யவேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். சகல வேலைகளையும் நிமிடத்தில் கற்றுக்கொள்கிறேன்; எனக்கு தயவு செய்து வேலை கொடுத்தால் போதும்—என்று கெஞ்சினான்.

மானே :—அப்படியானால் நாளது முதல் தேதி முதல் நீ வந்து சேரலாம். முதலில் 20 ரூபாய்தான் சம்பளம் கொடுக்க முடியும். பிறகு உன் வேலைத் திறமையைப் பார்த்துக்கொண்டுதான் உயர்த்த முடியும், என்ன சரிதானே! இதோ உத்திரவுச் சீட்டு, இதைக் கொண்டுபோய் முதல் தேதியன்று வந்துவிடு—என்று கூறினார்.

மகாதேவனுக்கு அச்சமயம் அந்த உத்யோகம் கிடைத்த சந்தோஷம் சாமானியமாகத் தோன்றவில்லை தனக்கிருந்த தரித்திரம் முற்றும் நீங்கப்பெற்று அதிஷ்டமே மழைபோல் பொழிந்துவிட்டதாக எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தான். விடைபெற்றுக்கொண்டு வெகு சந்தோஷத்துடன் சென்று லோகநாதனிடம் இவ்வானந்தச் செய்தியை வெகு ஆவலுடன் தெரிவித்து மகிழ்ந்தான்.

உடனே தனக்கு வேலை கிடைத்துவிட்ட பெருமையைத் தன் தாயாருக்குக் கடிதமெழுதினான். வேலையகப்படுவதற்கு முன்பு எங்கே வேலை கிடைக்குமென்று கவலை; அகப்பட்ட பிறகு எப்படி குடும்பத்தை நடத்துவது என்கிற யோசனை. தானும் தன் தாயாரும் இதுகாறும்போல் பிரிந்திராமல் ஒன்றாகவே இருந்து 20 ரூபாயில் சிக்கனமாக குடும்பத்தை நடத்தவேண்டும். 4, 5 ரூபாயில் ஒரு சிறிய இடத்தை யமர்த்திக்கொண்டு மிச்சமுள்ள 15 ரூபாயில் சாப்பாடு, துணிமணிகள் முதலிய சகலமும் பார்த்துக்கொள்ளவேண்டும். அங்குதான் அம்மா இத்தனை நாள் தனக்காக ச்ரமப்பட்டாள். இனிமேல் அம் மாதிரி ச்ரமப்படுத்தக்கூடாது. என்றெல்லாம் பெரிய பெரிய யோசனைக் கடலில் மூழ்கினான்.

"முதல் தேதி என்று வரும்?" என்று அதேயே எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். முதல் தேதியன்று காலையில் இவனுக்கு இரண்டு கடிதங்கள் கிடைத்தன. ஒன்று தன் தாயிடமிருந்து வந்த கடிதமென்று கூறவேண்டுமா! ஆவலே வடிவமாய்ப் பிரித்துப் படிக்கலானன்.

"சிரஞ்சீவி மகாதேவனுக்கு சர்வ மங்களமும் உண்டாவதாக.

நீ சென்ற பிறகு உன்னைப்பற்றியே கவலையாக இருக்கிற து. இந்த அல்ப விஷயத்திற்காக உடம்பையும், மனத்தையும் வாட்டிக்கொள்ளாதே. பகவானை நம்பி இரு. அவன் உனக்கோர் மார்க்கத்தைக் காட்டாது இருக்கமாட்டான். அடுத்த ஊர் மிராசுதாரர் வீட்டுக் கல்யாணத்திற்காக 10000 அப்பளமும் 20000 இலைக்கட்டும் வேண்டுமென்று கேட்டார்கள். உன் பொருட்டு அதற்கு ஒப்புக்கொண்டு அட்வான்ஸாக ரூபாய் 20 வாங்கிக்கொண்டேன் நீ அதை வைத்துக்கொண்டு அங்கேயே ஒரு வேலைக்கு ப்ரயத்தனம் செய். சலிக்காதே. முயற்சியும் ஊக்கமுந்தான் உதவி புரியும். என் சரீரத்தில் சிறிது திடம் இருக்கும் வரையில் உனக்கு என்னுலான உழைப்பின் மூலம் கிடைக்கும் ஊதியத்தை யனுப்பி வருகிறேன். கவலைப்படாதே.

(இந்த பாகத்தைப் படிக்கும்போது மகாதேவனின் கண்களில் மளமளவென்று கண்ணீர் முத்துக்கள் உருண்டோடிவிட்டன. அவனால் தடுக்கவே முடியவில்லை தாயின் தனிச்சுடர் அன்பை எண்ணி எண்ணி உள்ளம் உருகியது இந்த கரை காணாத பாசம் வேறு எந்தத் தனி யொருவருக்கு உண்டாகும்? அதனால்தான் எந்த சாஸ்திரத்திலும் முதலில் மாத்ருதே வோபவ; பித்ருதே வோ பவ என்றும், அன்னையும் பிதாவும் என்றும் பிதாவை பிறகுதான் கூறி இருக்கிறது. ப்ரதி பலனைக் கருதாத மழையும் அன்னையின் அன்பு மழையும் ஒன்றல்லவா?

இத்தனை கஷ்டங்களைப் பட்டும் தள்ளாத வயதான பிறகும் 10000 அப்பளாம் இடுவதென்றால் சாமானியமா! இலை தைப்ப

தென்றல் வாய் லேசான காரியமா...அடாடா...என் தாயை இனி அரைக்கணமும் கஷ்டப்படுத்தாது கால் வயிறு கஞ்சியாவது களிப்புடன் வார்த்து அவளைக் காப்பாற்றி கரை சேர்க்கும் பாக்யத்தை எனக்கு எம்பெருமான் அருளிச்செய்தால் போதும். என் தாய் ஜகத்ரக்ஷகியான மீனும்பிகையின் அனுக்ரகம் இருந்தால் போதும். மாற்றில்லாப் பொன்னும், மதிப்பில்லா மாணிக்கமும் கூட, பெற்ற அன்னையின் பாசத்திற்கு ஈடாகுமா?'' என்றெல்லாம் நினைத்தபடியே சற்று சோர்ந்து உட்கார்ந்திருந்தான் மீண்டும் கண்களைத் துடைத்துக்கொண்டு படிக்க வாரம்பித்தான்.)

மகாதேவா! உன்னுடைய நலனைக் கோருவதற்கும், உன் க்ஷேமகரமான வாழ்க்கையைக் கண்ணாரக் கண்டு களிப்பதற்குமே நான் உயிர் வாழ்கிறேன். உன்னுடைய மனத்தில் உதித்துள்ள எண்ணத்தை அடியோடு மாற்றிவிடு. இது நடவாத காரியம் என்று நான் பலதரம் கூறியும் நீ அந்த ஒன்றை மட்டும் இன்னும் விடவில்லை. பொதுவாக ஏழைகளைக் கண்டால் அவர்கள் கேவலமான சாக்கடையைக் காண்பதுபோல் இருப்பதை நீயே அறிவாய். அங்ஙனமிருக்கையில் அவர்கள் வீட்டுச் சம்மந்தத்தை விரும்புவது தகுமா!

நான் எத்தனை சொல்லியும் கேளாமல் பிடிவாதமாகக் கடிதத்தை அனுசூயாவிடம் சேர்ப்பிக்கும்படி நீ கூறிச் சென்றவாறே அதை எடுத்துக்கொண்டு போனேன். எனக்குச் சிறிதும் சம்மதமே இல்லை; எனினும் உன்னுடைய அல்ப ஆசையைத் தட்டாமல் நிறைவேற்ற வெண்ணியே சென்றேன். அனுசூயாவை விசாரிப்பதுபோல் விசாரித்து அவளிடம் கடிதத்தை யாருமறியாதபடிக் கொடுத்துவிட்டேன். அக் கடிதத்தை வாங்கிக்கொண்டதும் அது உன்னுடையது என்றதையறிந்ததும் அவள் முகத்தில் உண்டாகிய அபாரமான சந்தோஷமும், ஆநந்த உணர்ச்சியும் என்னை வியப்புறச் செய்தன. உனது அன்பு ஒருதலையன்பு என்றே இதுகாறும் எண்ணி இருந்தேன். இப்போதுதான் அவளும் உன்னையே பரிபூரணமாக நேசிக்கிறாள் என்று அறிந்துகொண்டேன்.

ஆனால் கடவுளுக்குத்தான் உங்கள் அன்பில் சோதனை யாக விருக்கிறது. அது கைகூடும் காலம் கனவிலும் இல்லை என்றதற்கு அத்தாட்சி அங்கேயே அறிந்துகொண்டேன். அதாவது வேறு ஒரு பணக்கார செல்வச் சீமாட்டி அனுசூயா வைப் பார்க்க வந்தார்கள். அவர்களிடம் உன் மாமி உன்னை யும், நீ ரத்தங் கொடுத்த த்யாகத்தையும் பற்றிப் பேசவும் வெறுத்து அஞ்சி மழமழ வென்று பேசினார்கள்.

வந்த அம்மாள் தூரவிருந்த என்னைக் காட்டி "இந்தம் மாள் உன் உறவுபோலிருக்கிறதே இந்தம்மாளின் பிள்ளைதான் ரத்தத்தை வெகு தைரியமாகக் கொடுத்துக் காப்பாற்றினு ராமே!" என்றூர்கள். இந்த வார்த்தை உன் மாமிக்குத் தாள வில்லை. "சேச்சே! இந்த தரித்திரங்களெல்லாம் உறவாவது! இலை தைத்து விற்பவளும், அப்பளாமிட்டு விற்பவளும் உற வென்ருல் வெட்கமாயிருக்கிறது. உறவுமில்லை, மண்ணுமில்லை. இந்த வீட்டிற்கு ஏதாவது வேலை செய்வாள் பிண்டத்திற்குத் தான் லாட்ரியாயிற்றே. இங்கு சோறு தின்பாள். அதுவே யொழிய வேறில்லை. வீட்டிற்கு முன்பெல்லாம் அடிக்கடி வந்து போவதால் உறவென்று கட்டு கட்டிவிட்டார்கள்.' என்று சற் றும் கூசாமல் கூறினுள். நான் தூரவிருப்பதால் காதில் விழா தென்ற எண்ணமும் அந்தம்மாளிடமிருந்தது.

தேவா! இவ் வார்த்தையைக் கேட்கும்போது என்னுயிர் தபித்தது. சாக்கடைப் புழுகையும் கடவுள்தான் சிருஷ்டிக் கின்ருர். இத்தகைய செல்வச் சீமாட்டிகளேயும் அதே கடவுள் தான் சிருஷ்டிக்கிருர் என்பது அவர்களுடைய எண்ணத்தி லில்லை போலும். உலகத்தையே ஆக்கவும், அழிக்கவும் சக்தி படைத்த கடவுளுக்கு எல்லாம் சமமாகவிருக்கிறது. இத்தகைய அல்பர்களுக்குத்தான் ஏழைகள் ஒரு கொடிய மிருகம்போல் தோன்றுகிறது. எல்லாம் கால வித்யாசந்தான் என்று மனந் தவித்தேன்.

உடனே நான் சொல்லிக்கொள்ளாமல் போய்விட நினைத் தேன். அங்ஙனம் சென்ருல் ஏதையேனும் திருடிக்கொண்டு

போய்விட்டதாக இந்த ஏழையின் தலையில் பழியொன்றைச் சுமத்திவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தினால் சொல்லி விட்டு வந்துவிட்டேன். மறு தினம் காலையில் தோட்டக்காரன் இரு கவர்களை என்னிடம் கொடுத்து, சின்ன எஜமானி கொடுக்கச் சொல்லியதாகக் கூறிச் சென்றான்.

அதில் ஒன்று உன் விலாசமும், ஒன்று என் விலாசமும் இருந்ததால் என் விலாசத்துக் கடிதத்தைப் பிரித்தேன். "இதோடிருக்கும் கடிதத்தை அத்தானுக்கு தயவு செய்து அனுப்பிவிடவும். இந்த விஷயம் நம்மைத்தவிர வேறு யாருக்கும் தெரியவேண்டாம்" என்று வரைந்திருந்தது.

தேவா! இந்த விஷயங்களை எல்லாம் ஏன் உனக்கெழுதி மனத்தை வருத்தவேண்டும், எழுதவே வேண்டாம் என்று நினைத்தேன். ஆனால் அவைகளெல்லாம் உனக்குத் தெரியாமல் இருந்து, உன்னுடைய மனதிலுள்ள எண்ணமும் வளர்ந்து கொண்டே போனால் கஷ்டமுண்டாகுமே! அந்த பெண்ணுக்கும் பாவம். ஏதேனும் தீங்கு நேருமோ என்று இதை உனக்கு எழுதினேன். இதையே ஒரு வ்யாஜமாக எண்ணி அவர்களைப் பகைக்காதே, பழிக்காதே. அனுசூயாவுக்கு நீயாக கடிதம் எழுதாதே எத்தனை கஷ்டங்களோ, அவமானங்களோ ஏற்பட்டாலுங்கூட அவைகளைப் பொறுத்துக்கொள்வதுதான் நல்லது.

ஆத்திரப்பட்டால் அவதிதான் உண்டாகும். பொறுமையை இழந்து, சிறுமையில் புகுந்தவனாவாய். நீ மகா புத்திசாலியானையினால் உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதொன்றுமில்லை. பணத்தினால் வரும் மதிப்பு ஒரு மதிப்பேயல்ல. உத்தம குணம் உயரிய ஒழுக்கம், ஒப்பற்ற பொறுமை இவைகளினால் வரும் மதிப்புதான் என்றும் அழியாதது. இதை மனத்தில் வைத்துக்கொண்டு மறவாமல் நட. நான் இம்மாதிரி எழுதியதற்கு வருந்தாதே.

வேணும் ஆசீர்வாதம்

இங்ஙனம் உன் நலனைக் கோரும்

உன் தாய். (சங்கரி)

இதைப் படிக்கும்போது தேவனின் மனம் துடி துடித்தது. கண்ணில் நீர் வழிந்தோடுகிறது. ஆத்திரம் கொள்ளவேண்டா மென்ற உபதேசத்தைப் படித்தும் ஆத்திரந்தான் தலை தூக்கிப் பொங்கியது. உடனே தாயின் நீதிவாக்கை நினைந்து, மனந் தேறினான். அந்த உணர்ச்சிகளை யொருவாறு அடக்கிக்கொண்டு மற்றவைரைப் படிக்க வாரம்பித்தான். அனுசூயாவின் பலவீனத்தினால் எழுதமாட்டாது கோண மாணலாக எழுதி இருந்தது நன்கு தெரிந்தது.

"அருமை அத்தானுக்கு அநந்தங்கோடி வந்தனங்கள்.

அத்தான்! உங்கள் கடிதத்தைப் படித்து எனக்கு கொஞ்சங்கூட சந்தோஷமே உண்டாகவில்லை. அத்தனைக் கத்தனை வெறுப்பும் விசனமும் உண்டாகியது. தூக்கு தண்டனையடைந்த கைதி யொருவனை—அகஸ்மாத்தாகச் சாகும்படி நோய் வாய்ப்பட்டுவிட்டவனை பல வைத்தியர்களைக் கொண்டு பிழைக்க வைத்துப் பின்னர் தூக்கு போடுவது எத்தனை ருசிகரமோ, சந்தோஷமோ அந்த ரகத்தில் தான் என் கதியாயிற்று.

இதைக் கண்டு நான் எவ்வித மகிழ்ச்சி யடைய முடியும். என்னுடைய விஷயத்தில் பெருங் குற்றவாளி நீங்கள்தான் என்று நான் வருத்தப்படுகிறேன். "விதியை வெல்ல யாரால் முடியும்?" என்ற வேதாந்தத்தில் மறுபடியும் தேறுகிறேன். மனத்தில் தோன்றுவதை எல்லாம் எழுதுவதற்கும் முடியாது பாழும் பலவீனம் தடுக்கிறது.

அனுசூயா"

மொட்டையாயும், வெகு பூடகமாயும் இருந்த அக் கடிதத்தைப் படித்த தேவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அக் கடிதத்தை உடைப்பதற்கு முன்பு அது பெரிய காதல் கடிதமாயும், இன்ப வெள்ளமாயுமிருக்கும் என்று எண்ணி மகிழ்ச்சியோடு படிக்க வாரம்பித்ததும் முற்றிலும் ஏமாற்ற மடைந்துவிட்டதால் ப்ரமை பிடித்தவன்போலானான்.

தான் ரத்தத்தைக் கொடுத்துப் பிழைக்க வைத்ததையே குற்றமாகக் கருதி எழுதி இருக்கும் சூக்ஷ்மத்தை யோசனை செய்து உணர்ந்தான். ஆனால் இவைகளைப்பற்றி அதிகம் சிந்திக்க அவகாசம் இல்லை என்பதை ஹாஸ்டல் கடியாரம் டங்கு டங்கு என்று 9 தரம் அடித்துக் காட்டி இவனை எழுப்பியது.

உடனே கடிதங்களை வைத்துவிட்டு ஏற்கெனவே சோப்பு போட்டு தோய்த்து வைத்திருந்த சொக்காயை அணிந்துகொண்டு மில்லுக்குச் சென்றான்.

இவனைப் பார்த்ததும் "சார்! ஐ யாம் வெரி சாரீ! எக்ஸ்க்யூஸ் மீ ப்ளீஸ். நேற்றுதான் அந்த வேலைக்கு மில் சொந்தக்காரர் தம் சொந்த மனிதனை தாமே அழைத்துவந்து வேலை கொடுத்துவிட்டு இதை கான்ஸல் செய்துவிட்டார். நேற்றே உமக்கு எழுதிப் போட்டுவிட்டேன். இதுகாறும் கடிதம் கிடைத்திருக்குமென்று நினைத்தேன். என்ன செய்வது? போய்வாருங்கள். வேறு ஏதேனும் காலி கிடைத்தால் உமது விலாசத்திற்கு எழுதுகிறேன்." என்று கூறிவிட்டு தன் வேலையைப் பார்க்க வாரம்பித்தார்

ஐயோ! பாவம்! படிப்புக்குத்தான் சமாப்தி வைத்துவிட்டு இதை நம்பி வந்தால் இங்கும் பூஜ்யமே கிடைத்துவிட்டதென்றால் அவன் மனது எவ்விதந்தான் தவிக்கும்? தனக்கு வேலை கிடைத்து விட்டதாகவே எண்ணி மகிழ்வதற்குள் இம்மாதிரி இடி யோசையைப்போல் 'இல்லை' என்ற பதில் மண்டையில் தாக்கியதும் தேவன் அங்கேயே இடிந்துபோய் குன்றிவிட்டான் பாவம்!

---


சாந்தகுமாரி

"வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்" என்னும் ஜீவிய ரகஸியத்தை நன்கு எடுத்துக் காட்டும் நவீனம். தற்கால வாழ்க்கையின் உன்னத சித்திரம்.........உலக விநோதம்......... க்ரோதப் புயலும், காதற் சுழலும்......கோபத்திற்கு முன் பாபமுண்டோ?......சண்டாளச் செய்கையின் சங்கட விளைவுகள்... அன்பின் வேகம் ஆற்றையும் கடக்கும்...பிரேமையின் ஜோதி... முற்றும் வியக்கும் சரிதை......உயரிய படக்காட்சிக்கு உகந்த நாவல், பல பாஷைகளில் மொழி பெயர்த்து புத்தகமாகவும், படமாகவும் வெளிவரத் தகுந்த இணையிலாக் கதைப் போக்கு. தமிழர் பெருமை படக்கூடிய புத்தகம்.

விலை. ரூ. 1. சந்தா நேயர்களுக்கு அணா. 14

7-வது அதிகாரம்

## அகம்பாவச் செய்கைக்கு அவமானப் பரிசு

மைனர் ஜமீந்தார் அனுசூயாவின் முகத்தின் பக்கமாகச் சென்று தன் முறுக்கு மீசையும், கறுக்கு பார்வையும் ஜொலிக்க நின்றார். அனுசூயா முகத்தையும் மூடிக்கொண்டு படுத்திருந்ததால் ஜெமீந்தார் மெல்லிய குரலில் "அனுசூயா! அனுசூயா!' என்று அழைத்தார், அனுசூயாவுக்கு மனம் பதறிப் பற்றி எரிகிறது. தன் தந்தையே குத்து கல்லைப்போல் இங்கு உட்கார்ந்துகொண்டு இந்த தடியனைத் தடுக்காமலிருக்கிறாரே என்ற ஆத்திரம் ஒரு புறம் பொங்கி வழிகிறது. முகத்திலுள்ள போர்வையை எடுக்காமல் மவுனமே சாதித்து ஊமைபோல் படுத்திருந்தாள்.

அந்த பக்கம் ஓர் நாற்காலியை இழுத்து போட்டுக்கொண்டு மைனர் உட்கார்ந்துகொண்டு மீண்டும் அழைத்தார். அனுசூயா போர்வையை எடுக்காமலேயே இந்தப்புறம் திரும்பிக்கொண்டு "ஐயோ! என்ன சங்கடம். இரவு முற்றும் தூக்கமில்லாது தவித்தாயிற்று. இப்போது கண்ணை இழுக்கையில் யார் தொந்தரை செய்வது? சனியன்!"—என்று தன் பிதாவின் காதில் விழும்படி முணுமுணுக்கிறாள்.

மைனரின் முகத்தில் அசடு வழிகிறது. கோபம் ஒருபுறம் பொங்கி எரிகிறது. பைத்தியக்காரச் சிரிப்பு சிரித்துக்கொண்டே திருகத் திருக விழிக்கிறார். ராமலிங்கத்திற்கும் சற்று கோபம் வந்துவிட்டது. அதை யடக்கிக்கொண்டு "அம்மா! யாருமில்லையம்மா! நமது மைனர் ஜமீந்தார்தான். அயலாரில்லை. உன் உடம்பைப்பற்றியே இரவு பகலாகக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார். உன்னைப்

பார்த்துவிட்டுப் போகத்தான் வந்தார். அன்போடு அழைத்தார்'' என்று சப்பைக் கட்டு கட்டிப் பேசியபடியே அவளருகில் வந்தார்.

அதே சமயம் டெலிபோன் பெல்லடித்ததால் ராமலிங்கம் எழுந்து சென்ருர். நர்ஸ் காலையாகாரம் செய்யச் சென்றிருந்ததால் அங்கு ஒருவருமில்லை. மைனர் மெல்ல அசட்டுப் பார்வையுடனேயே போர்வைக்குள்ளிருக்கும் அனுசூயாவின் கையை வெகு துணிவுடன் தடவினுர். அனுசூயாவின் தேகத்தின்மீது தணலை வாரிக் கொட்டியதுபோன்ற பெரும் வேதனை உண்டாகிவிட்டது. மெல்ல முகத்திலிருந்த போர்வையை விலக்கிப் பார்த்தாள்.

அவ்வளவுதான் அவள் தலை கிறுகிறுத்தது. அந்த அறையில் அத் தடியன் மட்டுமிருப்பதானது பாம்பின் பக்கத்தில் தான் இருப்பதுபோன்ற பெரும் வேதனையும் பயமும் உண்டாக்கிவிட்டது. இதற்குள் மைனர் அனுசூயாவின் இந்த பக்கம் வந்து நின்று "ஏன் அனுசூயா! இப்படி முகத்தை மூடிக்கொள்கிருய்? நான் பார்ப்பது உனக்குப் பிடிக்கவில்லையா! இதோ பாரு. உன்னுடைய நலனையும் சீக்கிரம் குணமடைய வேண்டுமென்பதையும் சதா கோரும் நபர்களில் நான் முதன்மை பெற்றவனல்லவா! இதோ பாரு'' என்ருர்.

அனுசூயா பதில் பேசாமல் அப்புறம் திரும்பிக்கொண்டாள். மைனர் அங்கும் சென்று மீண்டும் பல்லை இளித்துப் பேசியபடியே அனுசூயாவின் முகத்தில் போர்த்திருந்த போர்வையைத் தானே விலக்கினுர். அதுவரையில் மிக்க பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்த அனுசூயா ஆத்திரங்கொண்டு வாய் நிறைய எச்சிலைக் கூட்டித் "தூ!'' வென்று மைனர் முகத்தில் துப்பிவிட்டு உடனே இந்த பக்கம் திரும்பிக்கொண்டாள்.

ஐயோ பாவம்! ஆசை வார்த்தைகள் சொல்லப்போக எச்சில் அபிஷேகம் கிடைத்ததானது மைனரின் மீசை துடிக்கின்றது. இந்த அவமானத்தை யாரிடம் சொல்லிக்கொள்வது? தாங்கமாட்டாது தேகமே படபடக்கின்றது. "ஆகா! அனுசூயா! இத்தனை கர்வமா உனக்கு? இருக்கட்டும். உன் கர்வத்தை யொரு காலத்

தில் அடக்கும் சக்தி, ஆதிக்கம் என் கையில்தானிருக்கிறதென் பதை மறக்காதே......இன்று சும்மா போவதினுலேயே உன்னை விட்டுவிட்டதாக எண்ணி இறுமாப்பு கொள்ளாதே.' என்று கூறிக்கொண்டே தன் முகத்தை யாரேனும் பார்த்து விடப்போகிறார்களே என்ற அவமானத்துடன் எழுந்து, அங்கு நர்ஸ் வைத்திருந்த பேஸின் ஜலத்தருகில் செல்கையில், ராமலிங்கம் வந்துவிட்டார். "என்ன சார்! என்ன வேண்டும்?" என்றார். மைனர் திண்டாடிய நிலைமையுடன் "ஒன்றும் வேண்டாம்...உயர விருந்து பல்லி எச்சமிட்டுவிட்டது. அதை யலம்பப்போகிறேன்" என்று கூறிக்கொண்டே முகத்தைக் கழுவித் துடைத்த பின்னர் "சரி! நான் வருகிறேன்; குழந்தையின் உடம்பை பார்த்துக்கொள் ளுங்கள்." என்று சொல்லிவிட்டு திருடனுக்குத் தேள் கொட்டியது போல மெல்ல நழுவி விட்டார்.

இந்த ரகஸிய விஷயம் எதுவும் ராமலிங்கத்திற்குத் தெரியா தாகையினுல் சகஜபாவத்துடனேயே ஜமிந்தார் சென்றதாக எண்ணினர். பின்னும் சில தினங்களுக்குப் பிறகு அனுசூயாவிற்கு உடம்பு நன்ருகக் குணமாகிவிட்டது. எனினும் பலவீனமும் சோர்வும் அதிகமாயிருந்ததால் வேறு நல்ல க்ராமத்தில் சென்று மருந்து சாப்பிட்டால் நல்ல காற்று ஏற ஏற நல்ல ரத்தமும் விருத்தியாகும். ரத்தம் வ்ருத்தியானுல் பலம் தானே உண்டாகி விடும். காலையும் மாலையும் சிறிது தூரம் நடந்து சென்ருல் நல்லது." என்று டாக்டர் கூறிவிட்டார்.

இந்த விஷயத்தை யறிந்த மைனர் ஜமீந்தார் தங்களுக்குப் பல க்ராமங்கள் இருக்கின்றன. பெரிய ஏரிகளும், நல்ல ஔஷதங்கள் நிறைந்த மலைகளும் தோப்புகளும் ஏராளமாகவிருக்கின்றன வென் றும் அத்தகைய இடத்தில் இருத்தலே நலமென்றும் அங்கு வரும் படியாயும் ராமலிங்கத்தினிடம் கூறினர்.

மிஸ்டர் & மிஸஸ் ராமலிங்கத்திற்குச் சந்தோஷம் பொங்கிவிட்டது. உடனே ப்ரயாணத்திற்கும் சித்தமாகிவிட்டார் கள். ஆனுல் அனுசூயா கட்டோடு மறுத்து "அங்கு செல்வதனுல்

என் வியாதி இன்னும் அதிகரித்து தேகாரோக்யம் படுமோசமாகுமேயன்றி கடுகளவும் குணமென்பது கிடையாது. இது ஞாபகத்தில் இருக்கட்டும். நீங்கள் எந்த ஜமீன் சொத்தைக் கண்டு மயங்குகிறீர்களோ அந்த ஜமீந்தார் மகா சொத்தை, போக்கிறி, விஷம் போன்றவன்'. இந்த ரகஸியத்தை யறியாது இம்மாதிரி பேசுவதால் உங்களுக்கு கோபம் வரும். அப்படி வந்தாலும் வரட்டும். இம்மாதிரி விஷயத்தை வளர்க்க நான் இடங் கொடுக்கமாட்டேன். எனக்கு நிம்மதியாய் எந்த இடம் இருக்கிறதோ அதுவேதான் ஆரோக்யமாயிருக்கும். ஆதலால் நான் இந்த இடத்தையே நிம்மதிஸ்தலமாக எண்ணுகிறேன். வீண் ப்ரயாசையும் தொந்தரவும் வேண்டாம். அந்த மைனர் மகா சோதா! அவன் இனி இவ் வீட்டிற்கும் வர வேண்டாம்; அந்த பெயரை எடுக்கும்போதே எனக்கு எரிச்சலாயிருக்கிறது" என்று கூறிக்கொண்டே சடக்கென்று உள்ளே போய் விட்டாள்.

* * * * *

இது இங்ஙனமிருக்க, மகாதேவன் மனம் இடிந்து குன்றிவிடும்படியாய், 'வேலை இல்லை' என்று கூறிவிட்ட சங்கடத்தைச் சகிக்க மாட்டாது கண்ணில் நீர் பெருகிவிட்டது. முகம் மாறுபட்டு மார்பு படபடத்து பெருமூச்சாக வரத் தொடங்கியது. இவன் பரிதாபத்தைக் கண்டு மானேஜரின் மனம் உருகியது. ஆனால் என்ன செய்ய முடியும்? பரிதாபகரமாகப் பார்த்தார்.

தேவன் தன் விசனங்களை அடக்கிக்கொண்டு "ஐயா! வேறு ஏதாவது ஒரு சின்ன வேலை கிடையாதா! அம்மாதிரி இருந்தால் அதையாவது இவ் வேழைக்கு சிபார்சு செய்யக்கூடாதா?" என்று கெஞ்சிய குரலில் கேட்டான்.

மானே:—இருந்தால் ஒரு பி. ஏ. மாணவனுக்குக் கொடுக்க கஷ்டமா! நீ வேண்டுமானால் ஒன்று செய். இங்கு ஒரு மாத காலம் சம்பளமில்லாமல் வேலை செய்து சகல வேலைகளையும் கற்றுக் கொள்ளு. அதன்பிறகு நான் இந்த மில்லில் இல்லை என்றாலும் வேறு மில்லில் வேலைக்கு சிபார்சு செய்கிறேன்—என்றார். அது

வாகிலும் கிடைத்தால் போதும் என்று எண்ணி மகாதேவன் அதற்கு இசைந்து அன்று முதலே வேலைக்குச் சென்றான்.

சாதாரணமாக சில காரியங்களில் ஒருவருக்கு அதிர்ஷ்டம் வந்தால் வேறொருவருக்கு துரதிருஷ்டம் தானே வந்துவிடவேண்டு மல்லவா! சில காரியத்தில் சிலருக்குச் சந்தோஷமாகத் தோன்றும் காரியமே சங்கடமாக முடிவதும் உண்டு.

எஜமானனே பார்த்து வைத்த ஆள் உண்மையில் வேலை செய்வதற்காக வரவில்லை. மில்லிலிருந்து திருட்டுத்தனமாக துணி களை கொஞ்சம் கொஞ்சமாகத் திருடி வெளியில் கொண்டுபோய் விற்று வரும் வேலை செய்துவந்தான். இந்த உளவை மகாதேவன் தக்க ஆதாரங்களுடன் கண்டுபிடித்து எஜமானனுக்குக் காட்டிவிட் டதால் அவனை உடனே வேலையிலிருந்து நீக்கிவிட்டு மகாதேவனுக்கு டைபிஸ்டு வேலையைக் கொடுத்தார்.

தேவனும் தன் தொழிலை வெகு ச்ரத்தையுடனும் பொறுப் பாயும் செய்துவந்தான். "வேலை நிலைத்த பிறகே நீ ஒரு குடித்தனம் வைக்கலாம். அதற்கு முன்பு தனி விடுதியும், ஒட்டல் சாப்பாடுமே இருக்கட்டும்'' என்று தாயார் எழுதிவிட்டதால் அப்படியே இருந்துவந்தான்.

இவ்விதமே 7, 8 மாதங்களாயிற்று. மில்லின் முதலாளிக்கு அதை நிர்வாகம் செய்ய முடியாத ஓர் நிலைமை வெகு நாட்களாக ஏற்பட்டிருந்தும் மெல்ல சமாளித்துக்கொண்டு வந்தார். நாட்கள் ஏற ஏற அவரால் அதை நடத்த முடியாமல் தொழிலாளிகளை கொஞ்ச கொஞ்சமாக எடுத்துக்கொண்டே வந்தார். இந்த வியாதி தன்னையும் எப்போது பற்றிக்கொள்ளுமோ என்று மகா தேவனுக்குப் பயம் அதிகரித்துவிட்டது.

ஒரு தினம் மில்லில் தடபுடலான பரபரப்பும் ஒருவிதமான உத்ஸாகமும் தோன்றி எல்லோரும் அங்கு மிங்கும் அலைந்து வேலை செய்துவந்தார்கள். மகாதேவனும் தனக்குள்ள டைப்பு செய்யும் தொழிலை நடத்திவந்தான் அந்த மில்லைப் புதிதாக வாங்கப்போகும் பெரிய மனிதர் அன்று அதைப் பார்வையிட வரப்போகும் தட புடலே இது என்பதை தேவன் அறிந்தான்.

மில்லை 2-லக்ஷ ரூபாயிக்கு விலைக்கு வாங்கி விருத்திசெய்து வியாபாரத்தை மும்முறமாக நடத்தவேண்டுமென்ற எண்ணம் நமது திவான்பகதூர் (சமீபத்தில் அந்த பட்டமும் வந்துவிட்டது, ராமலிங்கத்தினிடம், ஜமீந்தாரின் உபதேசத்தினுல் உதயமாயிற்று.

அன்று ராமலிங்கம் தம்பதிகளும் அனுசூயாவும் வந்தார்கள். மில் மானேஜர் அவர்களுக்கு ஒவ்வொரு இடத்தையுங் காட்டி அதை விவரித்துக் கூறிக்கொண்டே வந்தார். அவர்கள் எல்லா மெஷின்களும் வேலை செய்வதையும் பார்த்துக்கொண்டே வருகையில் தேவன் டைப்பு செய்துகொண்டிருக்கும் விடுதியை தூரவிருந்தபடியே அனுசூயா அகஸ்மாத்தாகக் கவனித்தாள். அது உண்மையா வென்ற சந்தேகமும் குழப்பமும் சடக்கென்று தோன்றியது.

பெரிய மெஷினின் வேலையைத் தன் பெற்றோர்கள் கவனித்துக்கொண்டிருக்கையில் அனுசூயா மற்ற மெஷின்களைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டே தேவன் தலை குனிந்து கொண்டு டைப்பு செய்யும் விடுதிக்குச் சென்று சந்தடி செய்யாமல் மேஜையின் பின்புறமாக நின்று "தேவா! என்று அழைத்தாள். இக் குரலைக் கேட்டு திடுக்கிட்ட தேவன் திரும்பிப் பார்த்ததும் ஆச்சரியமும் ஆநந்தமும் ஒருங்கே அடையப்பெற்றவனாய் "ஆ! அனுசூயா!...நீ எப்போ வந்தாய்? எங்கே வந்தாய்?" என்று தான் டைப்பு செய்துகொண்டிருந்ததை நிறுத்திவிட்டுக் கேட்டான்.

அனுசூ:—ஓகோ! உங்களுக்குத் தெரியாதா! இந்த மில்லை அப்பா விலைக்கு வாங்கப்போகிறார். அது நன்மைக்கோ தீமைக்கோ தெரியவில்லை. ஊரிலுள்ள சகல நிலம் புலன்களையும் விற்றுவிட்டும், —கடன் கொடுக்கும் மைனர் மகாராஜன் இருக்கையில் குறைவே இல்லை—கடனும் வாங்கிப்போட்டு இதை 2 லக்ஷத்திற்குப் பேசி முடித்துவிட்டார். இன்று பார்த்துவிட்டுப் போனதும் பத்திரம் எழுதவேண்டியதுதான் தாமதம். அத்தனை ஏற்பாடுகளும் முடிந்து விட்டன சரி...அது கிடக்கட்டும். நீ இங்குதான் வேலையிலிருக்கிறாயா என்ன? அப்போது நீ வந்த பிறகு இதுபரியந்தம் அந்த பக்கமே வரவில்லையே...

மகாதே:—ஊம்...அந்த பக்கம் வராமலில்லை. என் தாயாருக்கு ஏங்கிவிடுமல்லவா! அதனால் அவளைப் பார்ப்பதற்கு நான் அங்கு வந்தேன். ஏழைகளெல்லாம் தொத்து வியாதிக்குச் சமமாகவன்றோ உன் தாயார் சொல்லி இருக்கிறார்கள். அதனால் பயந்து கொண்டு நான் வீதியிலிருந்தபடியே நீ காரில் செல்வதைக் கண்டு அம்மட்டுடன் திருப்தியடைந்து வந்துவிட்டேன். உனக்கு இப்போது பூர்ண குணமாகிவிட்டதா! பழைய நிலைமையிலிருக்கிறாயா? ஆனால் நான் பெருங் குற்றவாளியாகையினால் இதைக் கேட்பதும் குற்றமாகிவிடுமோ என்று பயப்படுகிறேன். அனுசூயா! நான் உனக்குக் குற்றவாளியாகத் தோன்றினாலும் கடவுளுக்கு நான் நிரபராதிதான். என் இதயத்திற்கும் என் ஆத்மாவுக்குங்கூட நான் நிரபராதி என்றுதான் நினைக்கிறேன்.

அனு :—இனிமேல் எத்தனையோ சாமர்த்தியமாகப் பேசலாம். நீ யாருக்கு நிரபராதியானல் எனக்கென்ன? எனக்கென்னவோ அவ்வாறுதான் தோன்றுகிறது. ஊம்....இனி நடந்துவிட்டதைக் கூறிப் பயன் யாது? நீ எத்தனை நாளாக இங்கு வேலையிலிருக்கிறாய்? என்ன சம்பளம்?

தேவன் :—சுமார் 7, 8 மாத காலமாக இங்கிருக்கிறேன். 20 ரூபாய் சம்பளம். காலை 9 மணிக்கு வந்தால் மாலை 6 மணிக்குச் செல்கிறேன். இந்த வேலையும் அகப்படாமல் தவிக்கும் பல துரதிருஷ்டசாலிகளை விட நான் இந்த அம்சத்தில் பாக்யசாலியல்லவா?

அனு :—டைபிஸ்டுக்குக்கூட 20 ரூபாய்தானு சம்பளம்?

தேவன் :—உம். முதல் இரண்டு மாதம் சம்பளமே இல்லாது வேலை செய்தேனே. இதுவாவது கிடைக்கப்போகிறதாவென்று ஏங்கினேன். இப்போதும் இந்த டைப் செய்வதுமட்டும் இல்லை. எங்தெந்த சமயம் எங்தெந்த வேலை செய்யச் சொன்னாலும் செய்ய வேண்டும். சமயம் வந்தால் மூட்டையும் தூக்கவேண்டும். தெரியுமா? ஏதோ இந்த தொத்து வியாதிகளின் வயிற்றிற்குக் கஞ்சி கிடைத்தால் போதும் என்று எல்லா கஷ்டங்களையும் அனுபவிக்க ஒப்புக்கொண்டேன்.

அனு :—தேவா! நீ இதை இம்மாதிரி திருப்பித் திருப்பிச் சொல்வது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது என் தாயார் சொல்வதை நான் சரி என்று ஒரு நாளும் நினைக்கமாட்டேன். அவளுடைய அல்ப குணத்தில் பழிப்பு புத்திதான் தினே தினே அதிகரிக்கின்றது. நான் என்ன சொல்லியும் கேட்பதில்லை. உனக்குத் தெரியுமே. என் அண்ணனுக்கு லக்ஷாதிபதி பெண்ணைத்தான் விவாகம் செய்துவைத்தாள். யாருடைய துரதிருஷ்டமோ அவர்களின் செல்வங்கள் கடலில் கலந்ததுபோலாகிவிட்டன. அப்போது கரும்பாக இனித்த நாட்டுப் பெண்ணும் சம்மந்தியும் இப்போது வேம்பாக மாறிவிட்டார்கள். ஐயோ பாவம்! பெண்ணைத் தள்ளியே வைத்துவிட்டார்கள். யார் சொல்லியும் கேட்பதில்லை. என்ன செய்வது? இதனால் என் தாயாரை ஊரே பழிக்கிறது.

தேவ :—அனுசூயா! கோபிக்காதே. நான் ஏதோ விளையாட்டாகச் சொல்லிவிட்டேன். என் கர்மம் உன் தாயை அவ்விதம் சொல்லும்படிச் செய்ததேயன்றி வேறல்ல நாம் பழம் புராணத்தைப் பேசிக்கொண்டிருந்தால் உபயோகமில்லை...உன்னுடன் யார் யார் வந்திருக்கிறார்கள்?

அனு :—அப்பா, அம்மா இருவரும் வந்திருக்கிறார்கள்.

தேவ:—அப்படியானால் நீ என்னோடு பேசுவதை அம்மா பார்த்துவிட்டால் உன்னைத் திட்டப்போகிறாளே. எனக்குப் பயமாக இருக்கிறதே. என்னால் உனக்கு...



அனு:—என்ன தேவா! இப்படி எல்லாம் வித்யாசமாகப் பேசுகிறாய்? உன்னால் எனக்கென்ன நேர்ந்து விடும்? அப்படியொன்றும் பயப்படாதே. ஏதோ அகஸ்மாத்தா நாம் சந்திக்கும் சந்தர்ப்பத்தை இந்த மில் உண்டாக்கியதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். இனிமேல் எப்போதோ! யார் கண்டது?

தேவ:—ஏன் அப்படிக் கூறிவிட்டாய்? உன் விவாகத்திற்குக் கூட எனக்கு அழைப்பு அனுப்பமாட்டீர்களா! நான் பரம தரித்திரனும், துர்ப்பாக்யவானும் இருப்பினும், மகா பாக்யசாலி யொருவனை யடையும் வைபவத்தைக் கூட நான் கண்ணால் கண்டு களிக்கலாகாதா? ஏன் அந்த பாக்யவான் அனேகமாக மைனர் ஜமீந்தார் தான் என்றும் தீர்மானமாகி இருக்கிறதாமே...

அனு.—தேவா! இனி இன்னொரு தரம் அந்த மூதேவியின் பெயரைக் கூறாதே. அவன் முகத்தில் நான் காறித்துப்பின வயிற்றெரிச்சலை அவன் செத்தாலும் மறக்கமாட்டான். அதனால் அவன் என்னை மணக்கவும் பயப்படுவானென்றே நினைக்கிறேன். தேவா! நீ கூடவா என்னை இக்கேள்வி கேட்பது. இது உனக்கு விளையாட்டாகத் தோன்றலாம். எனக்கோ இதயத்தைப் பிளக்கிறது.

தேவ:—அனுசூயா! வருந்தாதே! என்னை மன்னித்துவிடு. மனத்திலுள்ள வேகத்தினால் வாயில் வந்துவிட்டது. கடவுள் நம் விஷயத்தில் மிகவும் கன்னெஞ்சர் என்று தான் தோன்றுகிறது. நமக்குள் ஆழமறியாத இத்தகைய அன்பை மட்டும் தன் அபாரமான வல்லமையினால் உண்டாக்கிவிட்டு நம்மை சரி சமமான அந்தஸ்தில் வைக்காது வேடிக்கை பார்ப்பது சரியா! ஒன்று நீயாவது ஏழையாக இருக்கவேண்டும். அல்லது நான் கொள்ளையடித்தாவது பணக்காரனாகி விடவேண்டும். இவ்விரண்டும் ஆகக்கூடியதா? கனவில் கூட இல்லை.

அனு:—தேவா! செய்திருக்கும் பாவம் போதாதென்று இன்னமும் கடவுளைப் பழித்து வேறு பாபத்தைச் சுமக்கவேண்டுமா! நாம் பூர்வ ஜன்மாவில் செய்த கர்மத்தின்படி யல்லவோ நடக்கும். எனக்கு கல்யாணத்தை என் பெற்றோர்கள் கோருவதுபோல் உனக்கும் உன் தாயார் பெண்ணைப் பார்த்து வருகிறாளாமே.!

தேவ:—ஆம்; என் தாயார் என்னையே ப்ரபஞ்சமாக நினைப்பவளல்லவா? அவளுடைய ஆசையில் அவள் மாமியாராகியும், பாட்டியாராகியும் மகிழ எண்ணம். அவள் ஆசையின் எல்லையை என் இதயம் அறியும். என்னிடம் எதிர்பார்க்கும் இந்த அல்ப விஷ

யத்தை நான் கேவலமாகக் கருதுகிறேனெனினும் என் தாயாருக்கு அதுவே சொர்க்க போகமாகத் தோன்றுகிறது. தள்ளாத காலத்திலும் சரீரத்தைச் செருப்பாயுழைத்து என்னுடைய க்ஷேமத்தைக் கோரும் என்னருமை அன்னையை நான் எந்த விதத்திலும் த்ருப்தி செய்ய கடமைப்பட்டிருக்கிறேனல்லவா?

அனுசூயா! அத்தகைய நிர்ப்பந்தமான சந்தர்ப்பமும், தர்ம சங்கடமும் ஏற்பட்டுவிட்டால் அக்காரியம் எனக்கு த்ருப்தி இல்லை எனினும் என் முன்னறி தெய்வத்தை மகிழ்விக்கும் பொருட்டு நான் இணங்கி நடக்கவேண்டித்தான் இருக்கும். அவ்வாறு நடப்பது தான் எனது கடமையுமாகும். ஒரு அருமையான குழந்தையின் பொருட்டு தாய் எத்தனை கஷ்டங்களை யனுபவிக்க வேண்டியிருக்கிறது. உப்பில்லாப் பத்தியம் தாயாருக்குப் பிடித்த மிருக்குமா! குழந்தைக்காக அதை சகித்துக்கொண்டு இருக்க வில்லையா! அது போல் என் தாயின் பொருட்டு நானும் சகிக்கவேண்டியதுதான். இது தான் உத்தம மக்களின் உயரிய லக்ஷியமாகும்—

என்று கூறுவதைக் கேட்கும் போது அனுசூயாவின் மனம் உருகிக் கண்ணில் நீர் வந்து விட்டது. உள்ளத்தில் கூறத்திறமற்ற எழுச்சிகள் தோன்றி அவளை ப்ரமிக்கச் செய்து விட்டன. தன்னை மீறிய உணர்ச்சி வெள்ளத்தின் வேகத்தினால் ஒரு புதிய சக்தியும், உயிரைப் பருகும், கொள்ளை கொள்ளும் பார்வையும் கூடிய ஆவேசத்துடன் தேவனின் இரு கரங்களையும் பிடித்துத் தன் கண்ணருவியில் அவன் கைகளாகிய மலரை அலம்புவது போல் பதித்துக் கொண்டாள்.

"உத்தமன்!..........ஆம் நீயே உத்தமன்.......உன் தாயின் அன்பே உனக்கு விலையிலாத தனம். தாயை மகிழ்விக்காதவன் தரணியில் ஒரு சுமைபோன்றவன். மனித ஜன்மம் படைத்தும் மாக்களைப்போன்றவனேயாவன்........தாயின் தனித்த அன்பை எல்லைவிட்டுக் கூறத்திறமில்லை என்பதற்காகவே தாய் என்ற தெய்வத்தை ஒரே தெய்வமாகக் கடவுள் காட்டி இருக்கிறார்.

தாய்க்குப் பல குழந்தைகளிருக்கலாம். புருஷனுக்குப் பல மனைவிகள் இருக்கலாம். ஒருவனுக்குப் பல உடன் பிறந்தோர்கள் இருக்கலாம். பல பந்து மித்திரர்கள் இருக்கலாம், ஆனால், தாய்...... தாய்!........ஒருத்தியே! அவளை பாவனையினால் கூட வேறு விதமாகக் கருத முடியாது. தகப்பனை மணந்தவளாயிருப்பினும் மாற்றாந்தாய் என்கிற மாற்றுடன் தான் விளங்குகிறாள். பெற்ற புனிதத் தாய்க்கு மாற்றே இல்லை. தன்னுயிரையும் உதிரத்தையுங் கொடுத்துப் பெற்று வளர்த்த தாயின் அன்பை அறிந்த நீயே கடவுளுக்கு உகந்த புதல்வன்'' என்று அணை கடந்த வெள்ளம் வேகமாக வருவதுபோல் தட தட வென்று உபன்யாசம் செய்தாள்.

தேவனுக்கும் வாய் திறந்து பதில் பேசவே முடியவில்லை. இருவருடைய விழிகளும் நீர் அருவிகள் போலாகிவிட்டன. ஒன்றையொன்று தாக்கி மல்யுத்தம் செய்தும், விழுங்கிவிடும் போன்றும் இருக்கிறது. இந்த இடம் பலபேர்களும் வரும் பொது இடமாயிற்றே என்பதையும் மறந்தார்கள். அச்சமயம் அவ் வறைக்கு வெளியில் யாரோ கனைக்கும் சப்தத்தைக் கேட்டு அனு சூயா திரும்பிப் பார்த்தாள்.

கடோத்கஜனோ, பீமஸேனனோ என்று ஐயுறும்படியான நிலை மையில் மைனர் ஜமீந்தார் வாயில் பெரிய ஸிகரேட்டைப் பற்ற வைத்துப் புகை பிடித்துக் கொண்டே கோரப் பார்வையுடன் இவர் களையே பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டாள். மனத்தில் வெறுப்பும் ஆத்திரமும் மூண்டெழுந்தது. அந்த பக்கத்தைக்கூட பார்க்காமல் முகத்தைச் சுளித்துக் கொண்டு "தேவா! இந்த ராக்ஷ ஸன் இங்கு வேண்டுமென்று வந்து நிற்கிறான். நான் போகிறேன். பிறகு உன்னைச் சந்திக்க முடிந்தால் பார்க்கிறேன்'' என்று கூறி விட்டு ஓடி நகர்ந்தாள்.

மைனர் வெகு அகம்பாவ தொனியுடன் "ஓ! அனுசூயா! போகவேண்டாம். ரத்தங்கொடுத்து உன்னைக் காப்பாற்றிய வனின் மனம் நோகப் போகிறது. இன்னும் சற்று நின்று பேசி

விட்டுப் போகலாம்'' என்று குறும்பாகக் கூறினன். இதைக் கேட்ட அனுசூயா மிகவும் அலக்ஷியமாக நோக்கி "வெட்கங் கெட்டவர்கள் ஊருக்குப் பெரியவர்கள்'' என்று கூறிக்கொண்டே போய் விட்டாள்.

அப்போதும் அவளுடைய பெற்றோர்கள் மெஷினுடைய விஷயமாகவே பேசிக்கொண்டிருந்தார்கள். பின்னும் அவர்கள் எல்லோரும் முற்றிலும் பார்த்துக்கொண்டு வருகையில் தேவனையும் பார்த்தார்கள். மிஸ்டர் ராகலிங்கம் "என்ன தேவா! உனக்கு இங்கு தான் வேலையா? ரொம்ப சந்தோஷம்'' என்றார்.

மில் மானேஜர் "ஆமாம், இந்த மனிதன் மிகவும் நல்லவன். வேலையில் வெகு கருத்தோடு செய்கிறான். உங்களுக்கு மில் சொந்த மான பிறகும் இவனையே வைத்துக்கொள்வதில் மிகவும் நலன் உண்டு.'' என்று புகழ்ந்து பேசினர்.

மிஸ்டர் ராமலிங்கமும், மிஸஸ் ராமலிங்கமும் மகாதேவனை தடபுடலாக விசாரித்துப் பின்னர் "தேவா! இந்த மில்லை நான்தான் வாங்கப்போகிறேன். இதில் உனக்கு இனிமேல் நிரந்தரமான வேலை கிடைக்கும். நீ நம்ப மனிதனுகையினால் கனிகரமாயும் அக்கரையா யும் கவனித்துக்கொள்வாயல்லவா?'' என்றார் ராமலிங்கம்.

மகா:—அதற்கென்ன மாமா! என்னால் முடிந்த வரையில் உழைக்கத் தயாராயிருக்கிறேன். நான் பரம ஏழையானதால் கொடிய வியாதியைப்போல் ஒதுக்கப்பட்டவனாய் இருப்பினும் எனக்கிட்டுள்ள கட்டளையை நிறைவேற்றுவதில் ஒருபோதும் பின் னடைய மாட்டேன். இது நிச்சயம்—என்று அவன் கூறும்போது, குப்பம்மாளின் முகம் சுருங்கியது. ஒருவிதமான அசட்டுக்களை முகத்தைச் சூழ்ந்துகொண்டது.

அதே சமயம் ஜெமீந்தாரும் அவ் வறையில் வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் ராமலிங்கம் தடபுடலாகக் கைகுலுக்கி மரி யாதை செய்து அழைத்து மில் மானேஜருக்கும் முதலாளிக்கும் அறிமுகப்படுத்தினர். அனுசூயா இந்த ஜெமீந்தாரைக் கண்டதும் அங்கு நிற்க மனமின்றி மெல்ல வேறு பக்கம் நழுவிவிட்டாள்.

சில மாதங்களாகிவிட்டன. திவான் பகதூர் ராமலிங்கம் பெரிய மில்லின் சொந்தக்காரர் என்ற ஹோதாவில் தடபுடல் அட்டகாஸத்துடன் விளங்கினர். தினம் ஒரு வேளை மில்லைப் பார்வையிடுவதும், வேலையாட்களை எல்லாம் மிஸஸ் ராமலிங்கம் அதட்டியும் மிரட்டியும் அதிகாரத்துடன் வேலை வாங்குவதும் ஓர் தொழிலாகக் கொண்டார்கள். இந்த அதிகாரக் கொடிக்குள் மகா தேவனும் கட்டுப்பட்டவன் என்று கூறவேண்டுமா!

ஏற்கெனவே செல்வவந்தர். அதோடு ஒரு மில்லின் சொந்தக் காரராயும் ஆய்விட்டார் என்றால் ராமலிங்கத்தின்—அதிலும் மிஸஸ் ராமலிங்கத்தின் தலை நிற்குமா? தம்பிடியாகத் துள்ள வாரம் பித்துவிட்டது. தங்கள் அருமைப் புதல்வியின் விவாகத்தை வெகு சிறப்பாய் நடத்தி, கவர்னர் முதல் பலரை விருந்திற்கு அழைத்து விருந்து நடத்தி மகிழவேண்டுமென்ற பெரிய ஆவல் உண்டாகிவிட்டது. மாப்பிள்ளை என்னவோ, மைனர் ஜமீந்தார் கையிலேயே இருக்கிறார் என்ற அபாரமான ஆநந்தம் பொங்குகிறது.

ஒரு தினம் ராமலிங்கம் தம்பதிகள் அநுசூயாவை நோக்கி "அநுசூயா! இன்று நல்ல நாளாகையினல் நாங்கள் ஜமீந்தார் வீட்டிற்குச் சென்று அவர்களிடம் கல்யாண ப்ரஸ்தாபத்தைப் பற்றிப் பேசப்போகிறோம். நீ ஓர் பெரிய ஜமீந்தாரினியாகப்போகும் பேரானந்தத்தை விட வேறு எங்களுக்கு என்ன வேண்டும்?" என்று ஆரம்பித்தார்கள்.

இதைக் கேட்ட அநுசூயாவின் கண்கள் சிவந்தன. முகம் கோபத்தால் சுருங்கியது. அலக்ஷியமாயும் துச்சமாயும் முகத்தை யொரு திருப்பு திருப்பிக்கொண்டு "ஆம்...நீங்கள் விரும்புகிற படியே நடந்தால் நான் கூடிய சீக்கிரத்தில் "ஜாமீந்தாரினி" யாகத் தான் ஆவேன். அவன் செய்யும் அட்டூழியங்களுக்காகப் பிடித்துக் கொள்ளும் போலீஸ்காரர்களுக்கு நான் ஜாமீன்தாரினியாகத்தானே வேண்டும். அப்போது மனங் குளிர்ந்து விடுமா! என்று வெடுக்கென்று கேட்டாள்.

இந்த வார்த்தையைக் கேட்ட ராமலிங்கம் தம்பதிகளுக்குக் கோபம் பொங்கிவிட்டது. அனுசூயாவைத் தாறுமாறுகத் திட்ட வாரம்பித்தார்கள். ''மூதேவியே! உன் தரித்திர புத்தி உன்னை யொரு நாளும் விடாதுபோலிருக்கிறதே... அந்த ஜமீந்தாரையா நீ இம்மாதிரி ஏளனமாகப் பேசுகிருய்? அவருடைய பெருந்தன்மையாலல்லவோ நாம் இப்போது பெரிய மில்லின் சொந்தக்காரர்களாக வாழ்கிறோம்? இந்த நன்மையை அறியாது உளறுகிருயா! மரியாதை இல்லாமல் பேசாதே பெரிய மனிதர்களின் வீட்டுப் பெண்ணுக நடக்கத் தெரியவேண்டாமா? இது அவர் காதில் விழுந்தால் அவர் என்ன நினைப்பார்?'' என்று சரமாரியாகப் பொழிந்தார்கள்.

இதற்கெல்லாம் அனுசூயா சற்றும் சளைக்கவோ, பின் வாங்கவோ, பயப்படவோ இல்லை. மீண்டும் தைரியத்துடன் பேசத் தொடங்கி ''ஆமாம்...காமாலைக் கண்ணனுக்கு எதை நோக்கினும் மஞ்சளாகத் தெரிவதுதானே இயல்பு. அவனுக்கு இது கருப்பு, சிகப்பு என்று எப்படி சொல்லத் தெரியும்? அந்த கண் உங்களுக்கிப்போதிருக்கிறது. பணம், பணம் என்ற ஒரே ஆசையினுல் அதற்கு அனுகூலமாக எதுவும் ஒரே நோக்காயும், ஒரேவித பாவத்துடனும் தோன்றுகிறது.

நான் இம் மாதிரி சொல்கிறேன் என்று இப்போது நீங்கள் ஆயாசப்படலாம். என்னையும் சபிக்கலாம். இதன் பலன் கைமேல் தான் கிடைக்கும். உங்களையும் உருப்படவிடாமல் என்னையும் பாழ்ப்படுத்துவதற்குத்தான் அந்த ஜமீந்தார் இக் குலத்திற்குச் சண்டாளனுய் வந்திருக்கிறுன்.'' என்று கூறி முடிக்குமுன், மிஸஸ் ராமலிங்கம் கடுங்கோபங்கொண்டு அனுசூயாவின் கன்னத்தில் பளீரென்று ஆத்திரத்துடன் அடித்துவிட்டு ''நாயே! உனக்கு இத்தனை வாய்த்துடுக்கா வந்திருக்கிறது? அதிர்ஷ்டம் மழைபோல் பொழிய சந்தர்ப்பமிருந்தும் உன் துரதிர்ஷ்டம் காற்ருயடித்துக் கலைத்துவிடும்போலிருக்கிறதே!' சனியனே!'' என்று தாறுமாறுகத் திட்டிவிட்டாள்.

அப்போதும் அனுசூயா ஆத்திரத்துடன் கன்னத்தை யொரு கையால் அமுக்கிக்கொண்டே கண்ணீர் பெருகியவாறு ''ஆம்!

எனக்கு இத்தகைய அதிர்ஷ்ட மழை பெய்வதைவிட அஷ்ட தரித்திர மழையை நான் என் இதய பூர்வமாக வரவேற்கிறேன். அந்த அல்பனின் பவிஷு தெரியாது அவனிடம் குடுமியைக் கொடுத்துவிட்டீர்கள். பிறகு தவிக்கப்போகையிலல்லவா தெரியப்போகிறது! இதுகாறுமிருந்த நிலமாகவிருப்பினும் பாதகமில்லை. ஒருகாலமில்லை எனினும் ஒரு காலத்தில் விளைவை—தானியங்களை—கண்ணுல் காணலாம். இனிமேல் அதுவுமில்லை.'' என்று அவள் கூறி முடிக்கு முன்பு, வீதியில் மைனரின் மோட்டார் வந்து நின்ற சப்தத்தையறிந்து அனுசூயா தன் னறைக்குச் சென்று கதவைப் போட்டுக் கொண்டாள்.

மிஸ்டர் & மிஸஸ் ராமலிங்கம் வீதிக்குச் சென்று காரில் ஏறிக் கொண்டார்கள். கார் புறப்படுவதற்கு முன்பு மைனர் "ஏன் அனுசூயா எங்கே?'' என்றுர். பதில் சொல்லத் தியங்கியபடியே 'அவளுக்கு தலைநோவாயிருக்கிறதென்று படுத்திருக்கிருள். அதனுல் தொந்தரவு கொடுக்கவேண்டாமென்று வந்துவிட்டேன்.' என்று ஸ்ரீமதி குப்பம்மாள் திருவாய்மலர்ந்தருளினுள்.

பிறகு நான்கு நாட்கள் ஓடி ஒளிந்தன. கல்யாண ஏற்பாடுகள் மும்முரமாகிவிட்டன. ஜமீந்தார் பிள்ளைக்கும் பெரிய மில்லின் அதிகாரியும், திவான் பகதூருமான ராமலிங்கத்தின் மகளுக்கும் விவாகம் நடக்கப்போகின்றது என்ற பெரிய வதந்தி முக்கியமாக சமயல்காரர்கள், பந்தல்காரர்கள், மேளக்காரர்கள், பூரி தக்ஷிணை வாங்கும் கோஷ்டிகள், கச்சேரிக்காரர்கள், புஷ்பக்காரர்கள், பல்லக்கு சிங்காரிப்போர்கள், மின்சார விளக்குக்காரர்கள், முதலியவர்களிடம் பலமாக உலாவி அவர்களுக்கு உத்ஸாகத்தைக் கொடுத்ததால் இந்த கல்யாணத்தில் சரியான வருமானம் கிடைக்குமென்று தொழிலாளிகளும், பூரி தக்ஷிணை ப்ரியர்கள் குறைந்தது ஆளுக்கு 5 ரூபாயாவது கிடைக்காதாவென்றும் பேசிக்கொண்டார்கள்.

அனுசூயாவுக்கு வைத்தியம் செய்த பெரிய டாக்டர், ராமலிங்கம் வியக்கும்படி ஒரு தினம் இவர்களின் வீட்டிற்கு திடீம்ப்ரவேசமாக வந்தார். இவரைப் பார்த்ததும் தம்பதிகள் பரம

சந்தோஷமும், அபாரமான ஆச்சரியத்தையும் அடைந்து "வரணும் ...வரணும்.... உங்கள் தயவால் குழந்தை பிழைத்துக் கல்யாணமும் நடக்கப்போகிறது. எல்லாம் உங்கள் அனுக்ரகந்தான்'' என்று மிஸஸ் ராமலிங்கம் அளந்தாள்.

இதைக் கேட்ட டாக்டர் "நானும் அதைக் கேள்வியுற்றுதான் இங்கு வந்தேன். எங்கே அனுசூயா''? என்றார்.

மிஸஸ்:—அவளுக்கு நான்கு நாளாய் உடம்பே சரி இல்லை. எப்போதும் தலைவலி, உடம்புவலி. படுக்கையிலேயே படுத்திருக்கிறாள். இன்று உங்களிடம் அழைத்து வரலாமென்று பார்த்தேன். நீங்களே நல்ல வேளையாய் கல்யாணம் விசாரிக்க வந்தீர்கள்.

டாக்டர்:—மிஸ்டர் & மிஸஸ் ராமலிங்கம்! நீங்கள் நினைப்பது போல் நான் கல்யாணம் விசாரிக்க வரவில்லை. ஆனால் கல்யாணத்தைப் பற்றி பேசவே வந்திருக்கிறேன் இதற்கும் எனக்கும் எவ்விதமான சம்மந்தமுமில்லை. இதில் நான் ப்ரவேசிப்பது சற்றும் தகாத காரியம். அதிகப்ரஸங்கித்தனமும் ஆகும். ஆயினும் ஒரு நல்ல காரியத்தை உத்தேசித்து நான் இதில் ப்ரவேசிக்கிறேன்.

நீங்கள் நிச்சயம் செய்திருக்கும் மாப்பிள்ளையின் தேகாரோக்யத்தைப் பற்றி நானறிவேனே யன்றி நீங்களறியமாட்டீர்கள். கல்யாண மென்பது ஆயிரங்காலத்துப் பயிர். அழித்துச் செய்வதல்ல. அவன் ஜெமீந்தாராக இருக்கலாம். ஆனால் கொடிய நோய் பிடித்தவன் என்ற ரகஸியத்தை மட்டும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். உமது பெண்ணும் என் மகளும் ஒரே க்ளாஸ் மேட்டாம். இவன் தேகக் கோளாறை என் மகளறிந்தது முதல் தன் சிநேகிதையின் வாழ்நாள் பாழாகி விடப்போகிறதே என்ற கவலையால் என்னிடம் வேண்டிக் கொண்டாள்.

அனுசூயாவுக்கு இத்தகைய தாழ்வு வரக் கூடாதென்று எனக்கும் தோன்றியதால் நான் இதைச் சொல்ல வந்தேன். கல்யாணத்தின் உயரிய கருத்திற்கும், தர்மத்திற்கும், குடும்ப விருத்திக்கும் அவன் லாயக்கற்றவன். பணத்தினால் குழந்தையின் சந்தோஷம்

போங்கிவிட முடியாது. அவன் நெறி கெட்டு அலைந்து பல கொடிய நோய்களுக்கு இருப்பிடமாகி விட்டான். ஜாக்ரதையாக யோசித்துச் செய்யுங்கள். நான் இதைத் தெரிந்தும் கூறுதிருப்பது சரியல்ல வென்று தோன்றியதால் சொன்னேன். இதை மைனரிடம் நீங்கள் தெரிவித்தாலும் எனக்குப் பயமில்லை. உங்களிடம் வியாதியைப் பற்றி ஒளித்தும் மறைத்தும் வாதாடலாம் என்னிடம் அம்மாதிரி செய்தால் பகிரங்கப்படுத்திவிடுவேன். வேறு யாருக்காவது ஆரோக்ய வானுக்குக் கொடுத்து விவாகம் செய்யுங்கள். நான் கல்யாணத்தைக் கலைப்பதாக நீங்கள் நினைக்க வேண்டாம். நான் சென்று வருகிறேன்' என்று கூறிக்கொண்டே எழுந்தார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட தம்பதிகள் இடிந்துபோய் விட்டார்கள். அவர்களின் தலை சுழலவாரம்பித்தது. கல்யாணப் பேச்சு முழங்கவாரம்பித்தது முதல் தாங்கமாட்டாத கவலையுடன் படுக்கையிலேயே படுத்து பலவித யோசனைகளைச் செய்து குழம்பிக் கொண்டிருந்த அனுசூயா டாக்டர் இங்கு வந்த சந்தடி தெரிந்ததும் மெல்ல எழுந்து வந்து இவர்கள் பேசும் இடத்திற்குச் சமீபமாயுள்ள ஜன்னலருகில் நின்று இங்கு நடந்த சம்பாஷணையைக் கேட்டதும் அவளுக்குண்டாகிய பேரானந்த வெள்ளத்திற்கு அணை இல்லாது போயிற்று.

அப்படியே ஓடி வந்து டாக்டரை "நீங்கள் தான் என் வாழ் வின் விருத்திக்குக் கடவுள் போன்றவர்கள்." என்று கூறி அவர் காலில் விழுந்து கும்பிடலாமா வென்ற உணர்ச்சியும் கட்டு மீறியது. ஆனால் அவ்விதம் செய்வது தவறு என்று தோன்றியதால் அதை யடக்கிக் கொண்டதோடு "இந்த டாக்டரின் வார்த்தைகள் இவர்களு டைய மனத்தில் பதிய வேண்டுமே! கடவுள் இதற்கு க்ருபை செய்ய வேண்டுமே!" என்ற கவலையுடன் கடவுளை ப்ரார்த்திக்கத் தொடங் கினாள்.

திவான் பகதூர் தம்பதிகளுக்கோ எண்ணெயில் விழுந்த ஈக் களைப் போன்ற குழப்பமுண்டாகி விட்டது. ஜமீந்தாருக்குக் கொடுத்துவிட்ட வாக்கை நிறைவேற்றுவதா அல்லது பெண்ணின்

வாழ்க்கை நலனைக்கோருவதா? மைனர் ஜமீந்தாரின் த்வேஷத்திற்கும் கோபத்திற்கும் பகைமைக்கும் ஆளாவதா?'' என்கிற ஓர் பெருங் கலக்கமும், ஒருவிதமான பயமும், வைத்தியர் ஏன் இவ்விதம் சொல்லவேண்டும் என்ற ஆத்திரமும், ஒருகால் அநுசூயாவே வைத்தியரை இம்மாதிரி சொல்லும்படித் தூண்டினளோ என்னவோ என்ற சந்தேகமும், கோபமும் அனுசூயா பேரில் பாய்ந்து அதொருபுறமும் வேலை செய்ய வாரம்பித்ததால் ஒன்றுமே தோன்றாமல் இடிந்து விட்டார்கள்.

---

## 8—வது அதிகாரம்

### மணமா! பிணமா! மந்திரமா! மாயமா!

தீங்கு நேரும் காலத்தில் அதைத் தடுக்கும் பொருட்டு நன்மைகளையும் உண்மைகளையும் சிலர் போதித்தால் காலத்தின் கூற்றில் அதுவும் தீமையாகவே தோன்றுமாம். இது உலக சகஜம். ராமலிங்கம் தம்பதிகளுக்கு மட்டும் இது ஏன் நன்மையாகத் தோன்றும்? டாக்டர் தங்களுக்கு நன்மையைச் சொல்வது போல் கூறி இவ் விவாகத்தைத் தடுத்து விடுவதற்காகவே இம்மாதிரி ஓர் பெரிய சூழ்ச்சி செய்திருக்கிறார். இதற்குக் காரணம் இரண்டு இருக்கவேண்டும்

ஒன்று, தன் பெண்ணை அந்த இடத்தில் கொடுக்க எண்ணிச் செய்திருக்க வேண்டும்; மற்றொன்று அனுசூயாவே அவரிடம் போய் இம்மாதிரி கூறி தடுக்கும்படிக்குச் செய்திருக்க வேண்டும் இதைத் தவிர வேறு காரணமே இல்லை. நமக்கு இத்தனை பெரிய சம்மந்தம் கிடைத்து விடுவதைக் கண்டு பொறாமையினால் தான் இம்மாதிரி எல்லாம் செய்கிறார்கள். இருக்கட்டும். இதைப்பற்றி நாம் சற்றும் யோசனையே செய்ய வேண்டாம்.

இத்தகைய பெரிய பணக்கார சம்மந்தத்தை நாம் இந்த அல்ப விஷயங்களுக்காகப் பயந்து விட்டு விடக்கூடாது. அசட்டுத்தனமாய் விட்டு விட்டால் நமக்குத்தான் பல விதத்திலும் நஷ்டம். ஆகையால் இதை யாருடைய போதனையினுலும் நிறுத்தாமல் முடித்துவிட்டுத் தான் மறு காரியம் பார்க்கவேண்டும். இத்தனை பெரிய இடத்தில் இவ்வளவு தூரம் ஏற்பாடுகள் நடந்த பிறகு மாற்றுவதானது அவ மானத்திலும் அவமானம். இனி ஒரே தீர்மானந்தான்'' என்று திவான் பகதூர் தம்பதிகளும், அவர்களுடைய அருமைப் புதல் வனும் ஒன்று கூடி ஏக மனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்கள்.

டாக்டர் சொல்லியதைக் கேட்டதும் அனுசூயாவின் மனம் எத்தனை கட்டு மீறிப் பொங்கியதோ, அத்தனைக்கத்தனை இவர்கள் செய்த தீர்மானத்தினுல் மனம் உடைந்து சிதறிப் படுசூரணமாகி விட்டது. தனது வாழ்க்கையே நிர்மூலமாகி விட்டதாக எண்ணும் போது இவ்வுலகமே தலை கீழாகச் சுற்றிக் கவிழ்ந்து விட்டது போன்ற தோற்றம் உண்டாகிவிட்டது. பெற்ற தாய் தந்தையர் களும் பிறந்த சகோதரனுமே இம்மாதிரி ஓர் கொடுங் காரியத் தைச் செய்ய மனம் துணிந்து அதிலும் அபாரமான சந்தோஷமும் தன்னம்பிக்கையுங்கொண்டு செய்யத் துணிந்து விட்ட பின்னர் இனி யார் காலில் விழுந்து அடித்துக் கொண்டால் விமோசன முண்டாகும்? கோயிலிலிருக்கும் கடவுள் அவளுக்கு வெறும் கல்லா யும் செம்பாயுமே தோன்றி நாஸ்திக புத்தியை உண்டாக்கியது

"ஆம்! ஆம்! இது கல்லாயும் செம்பாயுமிருப்பதால் தான் இரவு பகலாக நான் வேண்டிக் கதறியும், ப்ரலாபித்தும் முறை யிட்டும் எனது தீனக் குரல் காதில் கேட்காமலிருக்கிறது. உண் மையில் உணர்ச்சியும், செவியும் இருப்பதாயின் என் குறையைத் தீர்க்க முன் வர மாட்டாரா! கடவுளுமில்லை. ஒன்றுமில்லை'' என் றெல்லாம் தோன்றியபடியே எண்ணிப் பிதற்றினுள். வெறி பிடித் தவள் போல் தலையைப் பிச்சிக் கொண்டாள்.

"சீச்சீ ....அந்த ஜெமீந்தாருக்கா வாழ்க்கைப் படுவது?' என்னுடைய அத்தனை மனக்கோட்டைகளையும், நூதனமாக உதிக்

கும் வாழ்க்கையின் புது மலர்களையும் அந்த பாவி ஜெமீந்தார் என்ற அக்கினிக்கா இரையாக்குவது? முடியாது; முடியாது நானே முகத்தில் காறியுமிழ்ந்த கசடனையா நான் வரிப்பது?'' என்ற அபாரமான எண்ணங்களால் குழம்பிப்போய் படுத்துப் புரள்வதும் எழுந்து உட்காருவதுமாக விருந்தாள்.

அச்சமயம் மெத்தையில் அருணாசலம் வைக்கும் க்ராம போனில் பின்வரும் பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது, அனுசூயா வின் செவியில் விழுந்தது. 'ஆட ஜேன்மமு லேத்தினு பலமேமி.'' என்றது கேட்டதும் அவள் மனத்தில் ஏற்கெனவே பொங்கி எரிந்து கொண்டிருந்த துக்கக் கனல் அதிகமாக மூண்டு ஜ்வாலை விட்டு எரிய வாரம்பித்தது.

பாட்டின் கருத்தறியாது இப்பாடலை வைத்துக் கேட்டு மகி ழும் அண்ணனுவது என் துயர் கண்டு சிபார்சு செய்யாமல் பாட்டை மட்டும் கேட்டு என்ன பலன்? இந்த இசைத் தட்டை உடைத்து எறிகிறேன். இது வீட்டிலேயே வேண்டாம்'' என்று பித்து பிடித்தவள்போல் கூறிக் கொண்டே எழுந்து மெத்தைப் படியை நோக்கி ஓட வாரம்பித்தாள் கல்யாணத்திற்காக வீட்டில் சாமான்கள் மூட்டை மூட்டையாக கூடத்தில் அடுக்கி வைத்திருப் பது அவள் கண்ணில் பட்டது.

முன்னினும் விபரீதமான ஆத்திரம் பொங்கிக் கொதிக்கின் றது அந்த மூட்டைகளில் அப்படியே நெருப்பை வைத்து எரித்து விடலாமா வென்று எண்ணியபடியே அதை உற்று நோக் கினாள். அந்த மூட்டைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விகார ரூப மாகத் தோன்றி ''உன் வாழ்க்கையை விழுங்க வந்திருக்கும் பூதங் கள் நாங்கள் தெரியுமா!' என்று பல்லைக் காட்டி நகைத்துப் பரி கஸிப்பதுபோல் தோன்றியது. அடுத்த நிமிடம் அத்தனையும் அத்தனை ஜமீந்தாரின் உருவங்களாகித் தோன்றியபோது அடங்காத வெறுப்புற்று முன்போலவே அலறியவாறு மூட்டைகளின் பக்கம் காரித் துப்பினாள்.

மறு வினாடிக்குள் அத்தனை மூட்டைகளிலும் தன்னருயிர்க் காதலன் மகாதேவனின் சாந்த ஸ்வரூபமும், புன்னகையும் அரும்புவதுபோல் தோன்றியதும் தன்னையே மறந்து தேகம் பரவசமானாள். சில விநாடிகள் தம்பித்து அவற்றையே நோக்கினாள். அடுத்த க்ஷணமே மூட்டைகள் இருந்த இடமே மறைந்து பெரிய வெள்ளம் போலும் அதில் தன்னை அடித்துக் கொண்டு போவது போன்றும், மைனர் நீந்திக் கொண்டு வருவது போன்றும் விபரீதத் தோற்றம் உண்டாகியதும் மெத்தைப் படியின் கைப்பிடியிலேயே அசதியின் வேகத்தால் சாய்ந்து விட்டாள்.

கல்யாண தடபுடலோ வீட்டில் கூறத்திறமில்லை...துக்கங் கொண்டாடுகிறவளைப்போல் அனுசூயா படுத்துக் கிடந்தாலும் அவளுடைய பள்ளிக்கூடத்தில் அன்று ஆண்டு விழாவாகையால் அதற்கு அழைத்த உபாத்தியாயினியின் சொல்லைத் தட்ட முடியாது புறப்பட்டாள்.

குப்பம்மாளும் தான் தான் சிறிய பெண்போல் அலங்காரம் செய்து கொண்டு கூடப் புறப்பட்டாள். தாயும் மகளும் மோட்டாரில் போகும் போது இவர்களுக்குப் பின்னால் வந்த ஒரு மோட்டார் வெகு வேகமாக இதைக் கடந்து செல்கையில், எதிரில் ஒரு ஏழைப் பெண்—பூர்ண கர்ப்பிணி—தத்தளித்துக் கொண்டு வருகிறாள்; வயது முதிர்ந்த தாயார், ப்ரஸவ வேதனையினால் வருந்தும் மகளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு வீதியில் வருகையில், முன் சென்ற கார் பறந்த வேகத்தில் அந்த வயது முதிர்ந்த மாதின் மீது மோதியடித்துக் கீழே புரட்டித் தள்ளிவிட்டுத் திரும்பியும் பார்க்காமல் போய் விட்டது.

கிழவி விழுந்த அதிர்ச்சியில் கர்ப்பிணியும் விழுந்து ஏககாலத்தில் இருவரும் ஹா வென்ற பெருங் கூச்சலிட்டார்கள். கூட்டங் கூடி விட்டது. காரில் வரும் அனுசூயா அந்த கார் தங்கள் காரைக் கடந்து செல்கையிலேயே அதைப் பார்த்து விட்டாள். குப்பம்மாளும் பார்த்து "அதோ! அதோ! ஜமீந்தார் காரில் செல்கிறார்'...... என்று ஒரு சிறு குழந்தையைப்போல் ஆர்ப்பரித்தாள். அனுசூயா

வின் முகம் கடுத்து வழிந்தது. தாயின் செய்கை தாங்கமாட்டாத வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக்கியது.

இந்த சம்பவம் ஒரு இமை கொட்டும் நேரத்தில் நிகழ்ந்து விட்டதால் இவர்கள் பார்த்துக் கொண்டே இருக்கையில் இந்த விபத்து நடந்து காரும் பறந்து விட்டது. அனுசூயா வண்டிக்குள்ளிருந்தபடியே ஹா! வென்று பெரிய சத்தமிட்டலறினாள். "ட்ரைவர்!...ட்ரைவர்!...காரை நிறுத்து.........நிறுத்து!"........என்று அனுசூயா கத்தினாள்.

குப்பம்:—ஐயா! காரை ஏன் நிறுத்தவேண்டும்? இந்த தரித்திரப் பிணங்களைப் பார்ப்பதற்காகவா! சீச்சீ! காரை ஓட்டுப்பா.... என்றாள்.

ஆனால் ட்ரைவர் சடக்கென்று நிறுத்தி விட்டான். அனுசூயா காரிலிருந்து இறங்கி ஓட்டமாக ஓடி கூட்டத்தை விலக்கிக் கொண்டு கீழே விழுந்து கிடப்பவர்களிடம் வந்து பார்த்தாள். கண்ராவி சகிக்கமுடியவில்லை. பரம ஏழைகள் என்பது அவர்களைப் பார்க்கும்போதே தெரிந்து விட்டது. நல்ல வேளையாக இருவருக்கும் உயிர் போகும் அபாயகரமான அடி எதுவும் படவில்லை எனினும் கிழவியின் காலில் ஆட்டுச் சதை அப்படியே பிய்த்துக் கொண்டு போய் ரத்தம் பெருகுகிறது.

கர்ப்பிணி விழுந்த அதிர்ச்சியில் மூர்ச்சையாகிவிட்டாள். கிழவியின் வயிறெரியும் வேதனையில் "ஐயையோ! பாவி, படுபாவி. அவன் பணத் திமிரு பாழாப்போக. அவன் நாசமாப் போக. மோட்டார்கார் செருக்கு மூழ்கிப்போக ... கையிலே காலணு இல்லாத கொடுமையாலே ஒரு மைல் தூரத்திலிருந்து எம்மவளெ ஆஸ்பத்திரிக்கு இட்டுண்டு வந்தேனே ....... ஐயோ! பாவி சண்டாளன் அவன் எழவெடுக்க இப்படி பண்ணிட்டானே... மவளே ...மவளே!" என்று ப்ரலாபிப்பதிலிருந்து விஷயங்கள் முற்றும் ஒரு நொடியில் அனுசூயாவுக்கு விளங்கிவிட்டன.

இந்த பரிதாபத்தைக் கண்டு சகிக்காமல் அனுசூயாவின் கண்ணில் ஜலம் முட்டிவிட்டது. ஜெமீந்தாரின் மீதிருந்த ஆத்திரம்

பின்னும் அதிகரித்துவிட்டது. "அவரவர்களின் உயிர் எல்லோருக்கும் வெல்லமல்லமா?...ஏழையின் உயிர், பணக்காரரின் உயிர் என்று உயிரில் வித்யாசமிருக்கிறதா?பணத் திமிரும், கர்வமுமல்லவா வண்டியை ஏற்றிவிட்டுத் திரும்பியும் பார்க்காது போய்விடும்படிச் செய்தது!'' என்று மனம் புழுங்கினுள்.

உடனே கிழவியை நோக்கி "ஆயா! அழாதே....எல்லாம் விதி செய்யும் கூற்று. அனுபவிக்க வேண்டிய வேளைகளில் அதை அனுபவித்துத்தானே தீரவேண்டும். பயப்படாதே, கடவுள் காப்பாற்றுவார். அவரை நம்பு'' என்று கூறியபடியே தன் கைக்குட்டையினுல் கிழவியின் ஆட்டுச் சதையில் வழியும் ரத்தத்தைத் தடுக்க அதைக் கட்டினுள்.

இதற்குள், வண்டியில் உட்கார்ந்திருக்கும் குப்பம்மாள் கோபமும் வெறுப்புங் கொண்டு தாறுமாருகத் திட்டியபடியே "அனுசூயா!....ட்ரைவர்!'' என்று கத்துகிருள். அவளுக்கு ஏதோ பெரிய அவமானம் சூழ்ந்துவிட்டதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. தவிக்கிருள்; கையைப் பிசைகிருள். முகத்தைச் சுளிக்கிருள்; அவஸ்தைப்படுகிருள்.

அச்சமயம் அங்கு வீதியில் போய்க்கொண்டிருந்த மகாதேவன் இந்த கூட்டத்தைக் கண்டு இதென்னவென்று பார்க்கக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே புகுந்ததும் அனுசூயா கிழவியின் காலில் கட்டு கட்டுவதைக் கண்டு அவளுடைய அபாரமான உத்தம குணத்தையும், காருண்யச் செய்கையையுங் கண்டு ஆச்சரியப்பட்டவனுய், "அனுசூயா!''... என்று கூப்பிட்டான்.

வெகு நாட்களாக மழையின்றித் தவிக்கும் பயிர்களுக்கு மழையைக் கண்டதும் உயிர் வருவதுபோல் இந்த குரலைக் கேட்டதும் அனுசூயா திரும்பிப் பார்த்து வியப்புக் கடலில் மூழ்கினுள். "தேவனு!...என்ன ஆச்சரியம்! எப்போது வந்தாய்?''...என்ருள். தேவன் அனுசூயாவின் கையிலிருந்த காரியத்தைத் தானே வாங்கிச் செய்தபடியே'' நான் நேற்றிரவு வந்தேன். இன்று என் தகப்பனுரின் திதி....ஐயோ! பாவமே....கிழ ப்ராணன்; பூர்ண கர்ப்பிணியின் உயிர்

துடிக்கின்றதே...எந்த சண்டாளனின் பணத் திமிர் இவ்விதம் விபத்தையுண்டாக்கியதோ தெரிய வில்லையே!'' என்று கூறிக் கொணடே கட்டி முடித்தான்.

அனு:—இந்த ஊருக்கென ஓர் புண்ணியாத்துமா மைனர் என் பவர் ஒருவர் இருக்கிறார். அந்த மகாபாவிதான் கொலைக்கும் அஞ் சாது செய்துவிட்டுச் சென்றான். அது கிடக்கட்டும். இவளை சற்று பிடித்துத் தூக்கு—என்றாள். உடனே மகாதேவன் கர்ப் பிணியை ஒரு பக்கம் பிடித்துத் தூக்கினான். ட்ரைவரும் தானும் சேர்ந்து தூக்கிக் கொண்டு மோட்டாரிருக்குமிடம் வந்தார்கள்.

அச்சமயம் அனுசூயா, மகாதேவன், ட்ரைவர் மூவருமாக அந்த கர்ப்பிணியைத் தூக்கிக் கொண்டு கார் அருகில் வருவதைப் பார்த்ததும் குப்பம்மாளின் தலைமீது குப்பை மலையே புரண்டு விழுந்து விட்டதுபோல் அத்தனை வேதனையும், அசங்கியமும், அரு வருப்பும் தோன்றி கையையும் முகத்தையும் ஆட்டி யாட்டி ''ஐயையோ! இதென்ன க்ரகசாரம்! இதென்ன வெட்கக்கேடு; இதென்ன விபரீதம்! அடி அனுசூயா! உனக்கு மானஹீன மில்லையா? ஊரார் பரிகவித்துச் சிரிப்பார்களே! கண்டோர் காரி உமிழ்வார்களே! அட எழவே! மகாதேவனு! நீ எங்கிருந்தடா முளைத் தாய்! என் மானம் போகிறதே. அடேய் கந்தப்பா! நீயுமா இந்த பயித்தியக்காரிக்கு உடந்தையா யிருக்கிறாய்?......இந்த பிச்சைக் காரக் கழுதையைத் தொடுவதற்கு உன் மனம் சகிக்கிறதா! பிடிக் கிறதா! எனக்கு வாயிலெடுக்க வருகிறதே!...

ஐயையோ! காரிலா விடப்போகிறாய்?.. முடியாது......இதில் விடக் கூடாது. சீச்சீ!.. துர்ப்புத்தி கொண்டு அலைகிறாயா! நான் விடவே மாட்டேன்...உம்...கீழே தள்ளிவிட்டுக் கையை சோப்பு போட்டு அலம்பிக்கொண்டு வா' என்று கத்துகிறாள்; தாண்டவ மாடுகிறாள்.

அனுசூயா ஒன்றிற்கும் முகத்தைக்கூடச் சுளிக்கவில்லை. ஒரு மாதிரியாக நகைத்துக்கொண்டே ''அம்மா! சற்று நகர்ந்து உட்காரு. ஐயோ பாவம்! இந்த ஆபத்து சமயத்திற்கு உதவாவிட்டால் நாம்

மனிதர்களாவோமா?'' என்று கூறிக்கொண்டே வண்டியின் கதவைத் திறக்கச் செய்து மெல்ல அவளைப் பிடித்தபடியே காரில் ஏற்றிவிட்டாள்.

குப்பம்மாளின் தவிப்பையும், ஆத்திரத்தையும் விவரிக்கவே சாத்யமில்லை...இரு கைகளாலும் தலையில் அடித்துக்கொண்டு கூக் குரல் போட்டபடியே ''அடீ சனியனே! ..இறங்கு...கீழே இறங்கு.. ஆபத்தாம்; சம்பத்தாம். பன்னியைப் போலவும், நாயைப் போலவும் தினம் குட்டி போட்டுக்கொண்டே இருக்கும் இந்த தரித்திரங் களுக்கு உபகாரம் வேறு செய்யவேண்டுமா! தடிப் பிணமே! இறங்கு. நீ எங்கேடா சமயத்திற்குச் சனியன் போல வந்து சேர்ந்தாய்?'' என்று மகாதேவன்மீது சீறி விழுந்தாள். மகாதேவன் பரிதாபகர மாக அவளை நோக்கி ''மாமி! இந்த சமயத்தில் நீங்கள் இவ்விதம் சொல்லலாமா? இம்மாதிரி ஆபத்தான சமயம் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் ஒன்றல்லவா?'' என்று கூறி முடிக்கு முன் குப்பம்மாள், நரஸிம்மாவதாரம் செய்தவள்போல் குதித்த வாறு ''தரித்திர சிகரமே!...உன் பவிஷுக்கு வேதாந்தமாடா பேச வந்து விட்டாய்? எங்க மில்லில் நான் வார்க்கும் கஞ்சியைக் குடித்து விட்டா உனக்குத் திமிர் பிடித்துவிட்டது?'' என்று இவள் கூச்சலிடு வதற்குள் அனுசூயா இவள் கூக்குரலைக் காதிலேயே வாங்காது வீட்டில் கர்ப்பிணியைக் கிடத்திவிட்டாள்.

அந்த தரித்திரமென்கிற தொத்து வ்யாதி ஒட்டிக்கொள் ளுமோ என்கிற பயத்தினால் குப்பம்மாள் இன்னொரு பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு சடக்கென இறங்கிவிட்டாள். அனுசூயா சாந்தத்துடன் ''அம்மா! நீ முன் பக்கத்தில் உட்காரும்மா!...ட்ரை வர்!...தேவா!...கிழவியைக் கொண்டு வாருங்கள் என்றாள். உடனே கிழவியை இருவரும் தூக்கிக்கொண்டு வந்து காரில் கீழே கிடத்தி னார்கள்.

வீதியில் பார்க்கும் ஜனங்களெல்லாம் அனுசூயாவை மெச்சி, அவள் தாயை இகழ்ந்தும் சரமாரியாகத் திட்டுகிறார்கள். குப் பம்மாளா முன்பக்கம் ஏறுகிறவள்! ''சீச்சீ...துஷ்ட மூதேவியே!...

தாயாருக்கு அடங்காத தறிதலை மகளிடம் நான் அடங்கவேண்டுமா? இரு...இரு...உன்னிஷ்டப்படி ஆட்டம் ஆடு...நான் இந்த தரித்திரக் குப்பையுடன் இந்த காரில் காலை வைப்பேனு?...அதோ... அதோ...டாக்ஸி வருகிறது''....என்று கூறியவாறு வீதியில் செல்லும் டாக்ஸி காரை நிறுத்தி அதில் ஏறி உட்கார்ந்து கொண்டு முக்கண்ண மூர்த்திக்குமேல் கோபத்துடன் போய் விட்டாள்.

''தேவா! முன் பக்கம் உட்காரு'' என்று குயில் போன்று அநுசூயா கூறினுள். தேவன் முன் பக்கம் உட்கார்ந்ததும் கார் வேகமாகக் கிளம்பியது.

இரு ஆத்மாக்களும் அன்பின் சங்கிலியில் ஒன்றேபோல் பிணைக்கப்பட்டு ஒரே வண்டியில் செல்லும்போதும் வாய்விட்டுப் பேசவே முடியாத வேதனையினுல் துடி துடிக்கும் தேவனும் அநுசூயாவும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டே பேசாமடந்தையைப்போல் வீற்றிருந்தார்கள்.

அநுசூயாவின் மனத்தில் தன் சொந்த எண்ணத்தின் போராட்டம் ஒரு புறம் இருப்பினும் அந்த பூர்ண கர்ப்பிணியின் அவஸ்தையைப் பார்த்து பரிதாபமும், அவளுடைய நிலைமையைக் கண்டு விசனமும், அவள் சாகாமல் பிழைக்கவேண்டுமே என்ற கவலையும் ஒன்ருகக் கூடி வருத்துகிறது. அந்த மைனர் ஜமீந்தாரின் திமிரும், பணச் செறுக்கும், அவன் காரை ஏற்றிவிட்டுத் திரும்பிப் பாராது சென்ற கடின சித்தத்தின் போக்கும் ஒரு புறம் மனத்தைப் பிளக்கிறது. அத்தகைய கொடும் பாவிக்குத் தன்னை மன மொப்பித் தன் பெற்ருேர்கள் கொடுக்கத் துணிந்திருக்கும் வயிற்றெரிச்சலை நினைக்கும்போது தான் எங்கேயோ பெருந்தீயின் மத்தியில் இருப்பது போன்ற சகிக்க முடியாத பரம சங்கடமும் வேதனையும் தோன்றி வதைக்கிறது.

இந்த அபாரமான உணர்ச்சி ஏற்படும்போது ஆகாயமும் பூமியும் தலை கீழாகச் சுற்றுவது போன்ற மன அதிர்ச்சி ஏற்பட்டு வாட்டியது. இந்த உணர்ச்சிகளாகிய புசல் காற்றில் போராடிக் கொண்டிருக்கையில் ஆஸ்பத்திரியின் வீதியில் வண்டி நின்றது. ட்ரைவர் கூறிய பிறகே அநுசூயா சுய உணர்வு பெற்று வேகமாக

இறங்கி ஆஸ்பத்திரியில் அந்த கர்ப்பிணியையும் கிழவியையும் ஒப்பு வித்தாள்.

உடனே நர்ஸ்கள் ஸ்ட்ரெச்சர் கொண்டு வந்து நோயாளிகளை உள்ளே கொண்டுபோய் விட்டார்கள். அனுசூயா அந்த ஏழைகளைச் சரியாகக் கவனித்துக் கொள்ளும்படி ஆஸ்பத்திரி டாக்டரிடம் சொல்லி விட்டு, கர்ப்பிணிக்கும் கிழவிக்கும் தைரியங் கூறிப் பின் ஒரு 5 ரூபாய் நோட்டைக் கிழவியிடம் கொடுத்து செலவுக்கு வைத்துக் கொள்ளும்படி கூறி விட்டு வீதிக்கு வந்து காரில் ஏறிக் கொண்டாள், தியங்கியபடியே தேவன் கீழேயே நின்றான். "தேவா! நீ எங்கே போகவேண்டும்? காரில் ஏறிக் கொள்ளேன்" என்றாள்.

தேவ:—நான் வீட்டிற்குப் போகிறேன். நீ எங்கேயோ காரியமாகப் புறப்பட்டாய் போலிருக்கிறது. அங்கு போக வேண்டாமா?

அனு:—அதற்கென்ன போனால் போகிறது. நீ இன்னும் எத்தனை நாளைக்கு இங்கிருப்பாய்?...

தேவ:—இன்றிரவே புறப்பட வேண்டும். 9 மணி வண்டிக்குப் போகிறேன். ஏதோ கடவுளின் கருணையினால் இந்த தரம் எதிர்பாராத விதமாக உன்னைப் பார்க்கும்படிக் கடவுள் கிருபை செய்தது என் பாக்கியந்தான். சரி. நேரமாகிறது; நான் வருகிறேன். உன்னை மாமி திட்டப்போகிறாள். சீக்கிரம் சென்று விடு.

அனு:—தேவா! நீயும் வண்டியில் ஏறிக்கொள்ளு. உன்னை வீட்டில் இறக்கி விட்டே போகிறேன். அது கூட நீ செய்யக் கூடாதா?—என்று சற்று பரிதாபத்துடன் கேட்டாள். உடனே தேவன் பதில் பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்தான்.

காரும் கிளம்பியது. தேவனை அவன் வீட்டு வாசலில் இறக்கி விட்டு அனுசூயா தன் பள்ளிக்கூடத்திற்கு வந்தாள். அந்த பள்ளிக்கூடத்துத் தோட்டத்தில் போவோரும் வருவோருமாக விருந்தார்கள். அனுசூயா காரை நிறுத்தி விட்டு இறங்கி மயில்போல் நடந்து சென்றாள். அங்கு ஒரு பக்கம் மரத்தின் சமீபத்தில் குப்பம்மாளும், ஜமீந்தாரும் பேசுங் குரலைக் கேட்டு அனுசூயா அப்படியே நின்று அதை கவனிக்க வாரம்பித்தாள்.

குப்பம்மா:—எந்த நேரம் பார்த்தாலும் இதே தொல்லையாய் விட்டது...'ஏழை ஏழை!' என்று சதா அடித்துக் கொள்கிறது. எந்த ஏழையையும் பார்த்துச் சகிக்காமல் கிடைத்ததை எல்லாம் தூக்கிக் கொடுத்து விடுகிறது. அவள் தலையெழுத்து அவளும் ஏழையாகித் தவிக்காமல் பிறந்திருந்தும் அதே உணர்ச்சியால் அலைகிறாள்.

மைனர்:—உம்...... அதெல்லாம் எங்கிட்ட வந்தால் சரியாகி விடாதா? ஏழைகளாவது! ஏழைகள்! அவர்களைக் கண்ட இடத்தில் நாயை அடிப்பது போல் அடிக்க வேண்டாமா? அந்த தரித்திரங்களை கண்ணால் பார்ப்பார்களோ?

குப்பம்:—ஆமாம்ணா! அந்த அல்ப தரித்திரங்களை என் காரிலேயே ஒன்று வைத்துத் தூக்கிக் கொண்டு போய் விட்டாள். அதைப் பார்க்கும்போது என் ப்ராணனே போய்விடும்போல் அவமானமும் பாதித்தது எத்தனை முட்டிக் கொண்டும் கேட்கவில்லை. என்ன செய்வேன்?

மைனர்:—என்ன! என்ன! என் காரில் அடிபட்டவர்களையா அனுசூயா தூக்கிக் கொண்டு போனாள்? அட வெட்கக்கேடே! இத்தகைய தரித்திர தேவதைகளைக் கையால் தீண்டுவதா! நாயை... எலியை...ஈயை எறும்பை அடித்துப் போடுவதுபோலல்லவா அவைகளை அடித்துப் போடவேண்டும்? இம்மாதிரி என் காரில் எத்தனையோ தரித்திரங்கள் பூபாரத்தை விட்டுத் துலைகின்றது போல் துலைந்தே போகிறதுண்டு. இவைகளை எல்லாம் திரும்பியா பார்ப்பார்கள்? சீச்சீ!......நான் இன்னும் யாரோ என்னமோ என்று எண்ணினேனே... அவள் எங்கேதான் அந்தப் பீடைகளை அழைத்துச் சென்றாள் தெரியுமா?

குப்பம்.—எங்கே என்ன!......ஆஸ்பத்திரிக்குத்தான். ஏழையானால் என்ன. பிண்டத்துக்குத் திண்டாடும் அஷ்ட தரித்திர மூதேவியானால் என்ன. பூர்ண கர்ப்பிணி. அந்த சனியனை இந்தப் பீடை ஆஸ்பத்திரிக்குத் தான் கொண்டு போயிருக்கும்!...

மைனர்:—ஓ! அப்படியா! வாருங்கள்; நாம் ஆஸ்பத்திரிக்கே போய் சீக்கிரம் அவளை அழைத்து வரலாம். ஒரு வேளை அந்த தரித்திரத்திற்குப் பிறக்கப் போகும் அஷ்ட தரித்திரத்தைப் பார்த்து விட்டுத் தான் வர வேண்டுமென்று உட்கார்ந்திருக்கப் போகிறாள். சீக்கிரம் இழுத்துக் கொண்டு வருவோம்...வாருங்கள்.

குப்பம்:—ஆமாம்...ஆமாம்... அந்த அசடு அப்படிச் செய்தாலும் செய்யும். உங்கள் யோசனையே யோசனை. வாருங்கள் போவோம்—என்று கூறிக் கொண்டே, இருவரும் முடுக்காகப் புறப்பட்டார்கள்.

Printed by Mr. B. R. Srinivasan, at Tata Press, 5, Thambu Chetty, St., Madras.
& Published by V. M. Parthasarathy 26, Car St., Triplicane Madras.

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

| 30 ரூபாய்க்கு 39 நாவல்கள். | முழு விலை | | 'ஜகன்மோகினி' சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை. | |
|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ரூ. | அ. |
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனா | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| இன்பஜோதி | 1 | 4 | 1 | 0 |
| ராஜமோஹன் | 1 | 4 | 1 | 0 |
| அனாதைப் பெண் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| சாந்தகுமாரி | 1 | 0 | 0 | 14 |
| மாயப்பிரபஞ்சம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| ப்ரேமப்ரபா | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அம்ருததாரா | 0 | 4 | | |
| அன்பின் சிகரம் | 0 | 4 | | |
| ஸரஸாராஜன் | 0 | 4 | | |

முன்பணமனுப்பி தபாற் செலவின்றி பெற்றுக் கொள்ளுங்கள். வி. பி. கிடையாது.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி.

Jaganmohini Vol. XIV—No 10 Regd. No. M. 2210.




தலை
வலிக்கு

# Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்




## அம்ருதாஞ்சனை உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

## அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்